# உதயன்

விலை ரூபா 6:00


பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 22 வியாழக்கிழமை (07-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:11

# பிரபாவைக் கைது செய்ய கோருகிறது 'இன்டர்போல்'

கொழும்பு,டிசெம்பர்7

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைதுசெய்ய உதவுமாறு சர்வதேச ரீதியிலான அறிவிப்பு ஒன்றை 'இன்டர்போல்'(Interpol) விடுத்துள்ளது.**

சர்வதேச பொலீஸ் அமைப்பான 'இன்டர்போல்' நிறுவனத்தின் சென்னை மற்றும் கொழும்பிலுள்ள கிளை அலுவலகங்கள் இந்தக் கைது உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக இன்ரர்போலின் அறிவிப்புத் தெரிவிக்கின்றது.

பிரபாகரனைக் கைது செய்ய உதவுமாறு கோரும் தனது அறி

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தை நோக்கி நேற்று மாட்டுவண்டில் சவாரி!

கொழும்பு,டிசெ.7

வடக்கு மக்களின் அவல வாழ்க்கை நிலையை சர்வதேச உலகின் கவனத்துக்குக் கொண்டுவரும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் வேறு ஆறுக்கும் அதிகமான ஐ.தே.கட்சி எம்.பிக்களுடன் நேற்று மாட்டு வண்டிலில் நாடாளுமன்ற அமர்வுக்குச் சென்றார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றச் சந்தியில் இருந்து நாடாளுமன்ற வீதி ஊடாக இவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

யாழ்.-கொழும்பு விமானசேவைக் கட்டண உயர்வு - வடக்கில் மட்டும் பெற்றோல் அதிக விலைக்கு விற்பனை செய்தல் - குடாநாட்டிலும், வன்னியிலும் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு - ஆகியவற்றை ஆட்சேபித்து இந்த மாட்டு வண்டில் சவாரி இடம்பெற்றது.

எம்.பிக்கள் ஊர்வலமாகச் சென்ற இரு வண்டில்களிலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பதாகைகள் காணப்பட்டன.

'ஜி.எஸ்.ரி வரியை நீக்கு!', 'கொழும்பு விலையிலே யாழ்ப்பாணத்திலும் எரிபொருளை விற்பனை செய்!', 'சரக்குக் கப்பலில் பயணிகளை அனுப்ப மக்கள் என்ன கழுதைகளா?', 'வன்னிக்கு தாராளமாக பொருள்களை அனுப்பு!', 'இதயசுத்தியுடன் பேச்சுக்களை நடத்து!' ஆகிய வாசகங்கள் பதாகைகளில் காணப்பட்டன. (உ-7-8)

## வன்னிக்கு உணவு அனுப்ப கோருகின்றார் ரணில்

கொழும்பு,டிசெ.7

உணவு, மருந்து மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்களை யாழ்ப்பாணத்துக்கும், வன்னிப் பகுதிக்கும் அனுப்ப அரசு முன்வந்தால் யாழ். பொது நூலகத்தைப் புனரமைப்பதற்கு எனது ஒருவருடச் சம்பளத்தை வழங்கத் தயாராக உள்ளேன்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்று நாடாளுமன்றில் உரையாற்றிய விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் வெஸ்லி குணவர்த்தனா, யாழ்.பொது நூலகத்தைப் புனரமைத்து அதன் மூலம் யாழ்.மக்களின் நம்பிக்கையை அரசு வெல்ல வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்த நூலகக் கட்டடத்தைக் கட்டுவதற்கு எம்.பிக்கள் அனைவரும் தமது சம்பளத்தில் ஒரு பகுதியை தர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அதற்குப் பதிலளித்து உரையாற்றிய போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்குத் தற்போது

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை, குருநகர் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்வதற்கான நிலைமையை அறிய குழு விஜயம்

யாழ்ப்பாணம்,செ.7

பாஷையூர், அரியாலை மற்றும் குருநகர்ப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்வதற்கான நிலைமை உள்ளதா என்பதை நேரில் கண்டறிவதற்காக குழு ஒன்று நேற்று அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்தது.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளும் இராணுவ அதிகாரிகள் மற்றும் ஈ.பி.டி.பி.யின் பிரமுகர்களும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இக்குழுவினர் சகல பகுதிகளுக்கும் விஜயம் செய்து அண்மைய யுத்தத்தால் ஏற்பட்ட சேதங்களையும் நேரில் பார்வையிட்டனர். மக்கள் மீளக் குடியமர்வதற்கான சூழல் இப்பகுதிகளில் காணப்படுவதாக குழுவினர் தெரிவித்ததாக ஈ.பி.டி.பி.வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் இந்தக் குழுவின் விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (ஐ-7-5)

## தோப்பூரில் புலிகள் ஐவர் உயிரிழப்பு

வவுனியா,டிசெ.7

திருகோணமலை தோப்பூர் பொலீஸ் நிலையத்துக்கும் பாலத்தோப்பூர் பொலீஸ் நிலையத்துக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் ஐந்து பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

- கப்டன் சிவா (சுப்பிரமணியம் சிவகுமார்-மாங்குளம்)
- 2ஆம் லெப்ரினன்ட் இராசேந்திரன் (கந்தசாமி சதீஸ்குமார் - மட்டக்களப்பு)
- 2ஆம் லெப்ரினன்ட் ரமணன் (மோகனதாஸ் சிறிதரன் - திருகோணமலை)
- சிறிநாத் (விஜயன் விமலேஸ்வரன் - யாழ்ப்பாணம்.)
- சிந்து (பாக்கியதுரை தாரணி- திருகோணமலை)

(ஐ-7-164)

## ரிக்கெட் வழங்கும் பணி நேற்று நடைபெறவில்லை

### இன்று வருமாறு பயணிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

'லங்கா முடித்த' கப்பலுக்கான பயணச் சீட்டுக்களை வழங்கும் பணிகள் நேற்று இடம்பெறவில்லை.

இன்று வழமைபோல் பயணச் சீட்டு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களுக்கும், நோயாளர்களுக்கும் ரிக்கெட் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பயணச் சீட்டுப் பெறுவதற்காக நேற்று அதிகாலை முதல் பல நூற்றுக்கணக்கானோர் யாழ். சிங்கள மகா வித்தியாலயச் சந்தியிலும், யாழ். ரயில் நிலையப் பகுதியிலும் கூடினர். எனினும் அங்கு இடம்பெற்ற சில விரும்பத்தகாத நடவடிக்கைகளை அடுத்து பயணச் சீட்டு வழங்கும் பணி நிறுத்தப்பட்டதாக வடக்கு புனர்வாழ்வு மீள் குடியமர்வு அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7-5)

## 'கினிகிர' நடவடிக்கையில் 12 படையினர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.7

சாவகச்சேரிக்கு மேற்கே நேற்று முன்தினம் படையினர் ஆரம்பித்த 'கினிகிர -5' இராணுவ நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை பன்னிரண்டாக உயர்ந்தது.

காயமுற்ற படையினரின் தொகையும் 36 ஆக உயர்வடைந்தது.

விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த செய்திக்குறிப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டையில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும், 15 சிப்பாய்கள் காயமுற்றதாகவும் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் மேலும் 11 படையினர் உயிரிழந்ததாகவும் 21 படையினர் காயமடைந்ததாகவும் பின்னர் நேற்று அறிவிக்கப்பட்டது.

படையினர் புதிதாக மீட்ட பகுதியில் பதினைந்துக்கும் அதிக புலிகளின் சடலங்கள் சிதறிக்கிடப்பதாகவும் -

ஆனால் அப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், பொறி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் கிளைமோர்க் கண்ணியில் பஸ் சிக்கியது கான்ஸ்டபிள், 3 சிவிலியன்கள் மரணம்!!

### பொலீஸார், பயணிகள் உட்பட 20 பேர் காயம்!!!

மட்டக்களப்பு,டிசெ.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையாரடிக்கும் சத்துருக்கொண்டானுக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று நண்பகல் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று கிளைமோர்க் கண்ணியில் சிக்கியதில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் பஸ் சாரதி, நடத்துநர் உட்பட சிவிலின்கள் மூவரும் உயிரிழந்தனர். இரு பொலீஸாரும் சிவிலியன்களில் 18 பேரும் காயமடைந்தனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்ஸே கிளைமோர்க் கண்ணியில் சிக்கியது.

பஸ் சாரதியான குமாரசாமி பாஸ்கரன் மண்டூர், நடத்துநரான நகுலேஸ்வரன், கல்லடியைச் சேர்ந்த எஸ்.அற்புதராசா ஆகிய பொது மக்களும் ஊறணி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் கருணாதிலக என்பவருமே பலியாகினர்.

இந்த பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் கல்லாறு மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் டியூக் அருள்பிரகாசம்(வயது 37), டாக்டர் செல்வி இராமன் மற்றும் இரு பொலீஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

காயமடைந்த ஏனைய பொதுமக்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் இராணுவத் தொடரணி ஒன்று இச்சம்பவம் நடந்த இடத்தைக் கடந்து சென்ற சிறிது நேரத்தின் பின்னர் இந்த பஸ் கண்ணியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸின் மேற்பகுதி வீதிக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டுக் கிடந்தது. (ஐ-7-21--8-10)

## ஆசிரியர்களுக்கு நத்தாருக்கு முன்பு இடர்காலக் கொடுப்பனவு நிலுவை

### தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு கல்வி அமைச்சர் உறுதி மொழி

கொழும்பு,டிசெ.7

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாது இருக்கும் இடர்காலக் கொடுப்பனவு நிலுவையை எதிர் வரும் நத்தார் பண்டிகைக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென 16 கோடி ரூபா உடனடியாக ஒதுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

சங்கத் தலைவர் சி.குமரகுருதாசன் தலைமையிலான தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு நேற்று கல்வி அமைச்சரைச் சந்தித்து வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சு நடத்தியது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடர்காலக் கொடுப்பனவு தொடர்பாகவும் தூதுக்குழு அமைச்சருடன் முக்கியமாக விவாதித்தது. இந்த நிலுவைக் கொடுப்பனவை நத்தார் பண்டிகைக்கு முன்பு சகல ஆசிரியர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் அப்போது உறுதி அளித்தார்.

நாடுமுழுவதும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு உள்ள வெற்றிடங்களை நிரப்ப அடுத்த ஆண்டு தொடக்கத்தில் 2000 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை விநியோகிப்பதில் இனித் தாமதம் எதுவும் இருக்காது. ஏற்கனவே ஒரு தொகுதி பாடநூல்களை கப்பலில் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மொழி மூல பாடநூல்கள் அனைத்தும் 2002 ஆம் ஆண்டு முதல் மாகாண மட்டத்தில் அச்சிடப்படும் என்றும் கல்வி அமைச்சர் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் தெரிவித்தார். (ஐ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ஓம்

# விக்னேஸ்வரா கல்வி நிலையம்

இல. 109, பொற்பதி வீதி, கொக்குவில்.

## 2001 கல்வியாண்டுக்கான வகுப்புக்கள்.

**ஆரம்பம்: 09-12-2000 சனிக்கிழமை**

**காலை 9.00 மணி**

**தரம் 6 முதல் O/L வரை**

யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

**கணிதம்:** திரு. S.வாமதேவன்
திரு. S.சிவானந்தம்

**விஞ்ஞானம்:** திரு. இரா.செல்வவடிவேல்
திரு. ரமேஸ்கண்ணா
செல்வி ப.கோகிலவதனி

**தமிழ், சமயம்:** திரு. புலவர் சிவா
திரு. ஞான. திருக்கேதீஸ்வரன்

**ஆங்கிலம்:** திரு. S. சந்திரமௌலி
திரு. S. கிருபாகரன்

**சமூகக் கல்வியும் வரலாறும்.:** திரு.K.S. முத்துலிங்கம்
திரு. பா. மகிந்தன்

**வர்த்தகம்:** திரு. பா.முரளி

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை:
ஒவ்வொரு ஞாயிறும் **'BOND'** வினாத்தாள் பரீட்சை நடைபெறும்.

(81260) - நிர்வாகி.

## யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க மக்களுக்கு முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 10.12.2000 ஞாயிற்றுக்கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த செபமாலைப் பேரணி காவல்துறையினரது அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையால் பேரணி நடைபெற மாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம். எனினும் யாழ் மரியன்னை பேராலயத்தில் வழிபாடுகள் காலை 10.40 க்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகித் திருப்பலியுடன் முடிவுறும்.

**பங்குத் தந்தையர்க்கும், மக்களுக்கும் இம்மாற்றத்தினால் ஏற்பட்ட சிரமங்களுக்காக வருந்துகின்றோம்.**

இயக்குநர்
யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட
நீதி, சமாதான ஆணைக்குழு.

(81366)

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை பழைய மாணவர் சங்கம்

## விசேட பொதுக் கூட்டம் - 2000

மேற்படி கூட்டம் 10.12.2000 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என்பதை அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பொ.சுந்தரலிங்கம்
தலைவர் (அதிபர்)

த.நா.போஜன்,
சி.தேவகுமாரன்
(இணைச் செயலாளர்கள்)

(81363)

## சேவை நலன் பாராட்டு விழா

தொல்புரம் விக்னேஸ்வரா பாடசாலையில் நீண்ட காலமாகப் பணியாற்றி ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி இரத்தினேஸ்வரி புனித சீலனின் சேவைநலன் பாராட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு.ஜெயகுமார் தலைமையில் நடைபெறும். (ம-173)

## THIGAL

இணுவில்
**A/L 2001, 2002 (மீட்டல்)**
**2001 Day Class**

தமிழ். திரு .க. தர்மராஜா
ஆரம்பம்: **09-12-2K**-3 p.m

கல்வியாண்டு - 2001
தரம் 4முதல் **O/L** வரை.
ஆரம்பம்: **09-12-2K** - 9. am

(C/14172)

எமது நிறுவனத்திற்கு
எழுதுநர் ஒருவர் தேவை
**09-12-2K** நேரில் வரவும்.

## நாளை.... BEACON

(வெலிங்டன் சந்தி அருகில்)
**A/L 2001→DAY CLASS**
**தமிழ்**
**M.N.பங்கயற்செல்வி**
**08.12.2K →11.00 a.m.**
(81359)

## ராஜா யாழ்ப்பாணம்

3ஆவது கடைசி வாரம்
**விஜய், சிம்ரன், மணிவண்ணன்**
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
**துள்ளாத மனமும் துள்ளும்**
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
11.12.2000 முதல் **வாலி**
(C/14098)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
**விஜய், ஜோதிகா**
நடித்த
S.J.சூர்யாவின்
**குஷி**
தினசரி - 11.30, 2.30 (பு.நே.)
(81372)

## நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி

# மீள் கேள்வி அறிவித்தல் - 2001

கேள்விப்பத்திர விநியோகம் - 12.12.2000 நண்பகல் 12.00 மணி வரை. கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் - 13.12.2000 நண்பகல் 12.00 மணி வரையும். கேள்வி திறக்கும் திகதியும் நேரமும் 13.12.2000 பிற்பகல் 3.00 மணி.

மஞ்சத்தடி மாட்டிறைச்சிக் கடைக்கு விண்ணப்பிப்பவர்கள் தற்சமயம் நடைபெறும் இடத்திற்கு அண்மையில் காணியைத் தெரிவு செய்து காணிச் சொந்தக்காரரின் சம்மதத்துடன், கிராம சேவையாளரின் சிபார்சுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம். எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இறைச்சிக் கடை | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| கொக்குவில் உப - அலுவலகம் | | | |
| 01. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 350/= | 3000/= | 40,000 /= |
| 02. கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக் கடை | 350/= | 3000/= | 20,000 /= |
| 03. மஞ்சத்தடி மாட்டிறைச்சிக் கடை | 350/= | 3000/= | 40,000 /= |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
05.12.2000.

**க.மணிபல்லவராஜன்**
(ஜே.பி.யூ.எம்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை

(C/14174)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விஜயதரன் இராஜேஸ்வரி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயதரன் இராஜேஸ்வரி நேற்றுமுன்தினம் (05.12.2000) செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் விஜயதரனின் அன்புமனைவியும் சுபாஜினி('உதயன்' ஊழியர்) மாலினி (இராகலை), விமலினி (தங்கா-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாதனின்(கண்ணன்-இராகலை) அன்பு மாமியாரும் விது, அபிராமி(இராகலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2000) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமநாதன் லேன்,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

தகவல்:
கணவர்.

## கந்தையா தியாகராசா

காரைநகர், சிவன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது வவுனியா தவசிகுளத்தில் வசித்தவரும், காலஞ்சென்ற கந்தையா சிவகாமன் அவர்களின் சிரேஷ்ட புத்திரனும், வடபிராந்திய போக்குவரத்துச் சபை முன்னாள் உதவிச் செயலாற்றும் முகாமையாளருமாகிய கந்தையா தியாகராசா நேற்றுமுன்தினம்(05-12-2000) செவ்வாய்க்கிழமை காலை தவசிகுளத்தில் காலமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் யோகேஸ்வரன்(ஒட்டிசுட்டான்), திருப்பதிராசா(**C.T.B**-வவுனியா), ரகுபதிராசா(லண்டன்), மதிவதனி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சிவபாக்கியம், பரஞ்சோதி (ஆஸ்திரேலியா), சித்திராதேவி(லண்டன்), யவனாம்பிகை (கன்னாதிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,ஆனந்தமலர், யோகேஸ்வரி, கண்ணம்மா, சற்குணராசா(சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் **Dr**.இராசசேகரம், இராசையா(லண்டன்), புஸ்பமலர்(ஆஸ்திரேலியா), வரதராசா(கன்னாதிட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா தவசிகுளத்தில் இன்று (07-12-2000) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோயில் வீதி,*
*காரைநகர்.*

தகவல்:
இராசதுரை(**G.S** - மருமகன்)
திரு.திருமதி வரதராசா.
(மைத்துனர், சகோதரி)

(81362)

## மயில்வாகனம் அழகராசா

குகன் வீதி அரியாலையைச் சேர்ந்த மயில்வாகனம் அழகராசா 03.12.2000 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - அமுதரட்ணம் தம்பதிகளின் அன்பு மகனும் புஸ்பராசா, நேசமலர்(**U.K**), யோகராசா (**U.K**) ஆகியோரின் சகோதரனும் அன்னபூரணம் அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற ராஜன், ரஞ்சன்(**U.K**), றூபன்(**U.K**), காலஞ்சென்ற ரங்கன், றமணன்(நோர்வே), றோகன்(**U.K**), றாகினி(நோர்வே), ராகுலன் (**U.K**) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், நடேசலிங்கம்(நோர்வே), செல்வி(**U.K**), தவசோதி(நோர்வே), சுகந்தினி(வவுனியா) ஆகியோரின் மாமனாரும் மற்றும் அபிரா, அபிஷா, விதுரன், றெச்சினி ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2000) வியாழக்கிழமை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வவுனியா றம்பைக்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*86/1, முதலாம் குறுக்குத் தெரு,*
*வவுனியா.*
*தொ.பே.இல:- 024- 21974* (81367)

தகவல்
மனைவி,பிள்ளைகள்.

## தம்பிப்பிள்ளை நகுலேஸ்வரன்

மாசியப்பிட்டியைப் பிறந்த இடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நகுலேஸ்வரன் (05-12-2000) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - இராசம்மா ஆகியோரின் பாசமிகு மகனும், தவராஜா(ஜேர்மனி), மகேஸ்வரி, கைலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும்,தங்கராஜா(சாவகச்சேரி), சந்திரகுமாரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), கேதீஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், தினேஸ்குமார்(பாங்கொக்), சுஜாஜினி, கஜந்தா, விதூசிகன், தனூசிகன், ஜெனோஜன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07-12-2000) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

*மாசியப்பிட்டிச் சந்தி,*
*சண்டிலிப்பாய்.* (81369)

தகவல்:
சந்திரகுமாரன்
(மைத்துனர்)

## திருமதி பொன்னம்பலம் நாகரத்தினம் (பூரணம்)

பொற்பதி வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் ,கொண்ட திருமதி பொன்னம்பலம் நாகரத்தினம் (பூரணம்), நேற்று (6.12.2000) புதன்கிழமை பி.ப. 2.00மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - செல்லம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு மனோன்மணியின் பாசமிகு தாயும், திரு.S. திருநாவுக்கரசு (அரசாங்க ஒப்பந்தகாரரும்,**TOWER BUILDERS** உரிமையாளரும்) அவர்களின் அன்பு மாமியும், யாதவன்(**U.K**), யாழினி (மக்கள் வங்கி, **K.K.S**) ஆகியோரின் பேர்த்தியும், **P**.சீவரட்ணம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரியின் மூத்த சகோதரியும், சுந்தரேசன், திருத்தேவி, சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான தனபூசணி (ராணி), ஜெயநாதன், ஆனந்தன்(சிங்கப்பூர்) ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.12.2000) வியாழக்கிழமை நண்பகல் 12.30 (பு.நேரம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*"ஆயர்பாடி"*
*இல.1, நாமகள் லேன்,*
*கொக்குவில்.* (81364)

தகவல்
ச.திருநாவுக்கரசு
மருமகன்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஆஸ்பத்திரி இயங்காமையால் புங்குடுதீவு மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ. 7

புங்குடுதீவில் உள்ள ஆஸ்பத்திரி 1990 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து இயங்காமல் இருப்பதால் அப்பகுதி மக்கள் பெரிதும் சிரமப்படுவதுடன் தேவையற்ற உயிரிழப்புகளையும் சந்திக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடமும், அரசியற் கட்சிகளிடமும் பல தடவைகள் முறைப்பாடு செய்த போதும் இதுவரை ஆக்கபூர்வமான முடிவெதுவும் கிடைக்கவில்லை எனவும் —

ஆஸ்பத்திரிக் கட்டடம் எந்தவித சேதமும் இன்றி இருக்கின்றது; வைத்தியர் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் எனவும் —

புங்குடுதீவு மக்கள் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் கூட வேலணை ஆஸ்பத்திரிக்கு கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அவசர நேரத்தில் போக்குவரத்து வசதிகள் கூட இல்லாமல் மக்கள் தேவையற்ற உயிரிழப்புகளைச் சந்திக்கின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

(ம-6-5)

## தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறு

ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குக் கிடைத்தன. இப் பெறுபேறுகள் யாவும் நேற்றைய தினமே உரிய பரீட்சார்த்திகளின் முகவரிகளுக்கு தபாலில் சேர்க்கப்பட்டதாக யாழ். கல்வி வலய அதிகாரிகள் தெரிவித்தனர். [ஐ-51]

# உதயன்

## மோசமடையும் அன்றாட வாழ்வு

அடுத்து வரும் மூன்று மாதங்களுக்குமான அரசாங்கத்தின் உத்தேச செலவின விவரம்— கணக்குவாக்கு— நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மூன்று மாதங்களுக்குமான செலவு 13, 319 கோடியே 54 லட்சம் ரூபாவாக இருக்கும்.

நாட்டின் பொருளாதார நிலை போரினாலும், ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கான அபரிமிதமான செலவுகளாலும் மிக மோசமடைந்து வருகிறது. திறந்த பொருளாதார முறை நாட்டின் நிதி நிலைமையை மேன்மைப் படுத்தியுள்ளதாக மேலோட்டமாகக் கூறப்படுகிறது.

ஆனால், மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு நாளாந்தம் உயர்ந்து செல்கிறது; அவர்கள் மத்தியில் ஏழ்மையும் அதிகரிக்கிறது. கடந்த வருடம் அப்போதைய அரசாங்கம் நாணயத்தின் பெறுமதியைக் குறைத்ததால் விலைவாசி உயர்வுகள் மேலும் மோசமாகி மக்களைப் பாதித்தன; இப்போதும் பாதிக்கின்றன.

புதியஅரசுபதவிக்கு வந்தபின்னர் எரிபொருளின் (டீசலின்) விலையும் கோதுமை மாவின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளன. இவை இரண்டின் விலையேற்றங்களும்உணவுப் பொருள்களினதும் ஏனைய பொருள்களினதும் விலை அதிகரிப்புளுக்கு இட்டுச் செல்லும். மக்களில் மிகமிக அதிகமானோரை தமது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத பெரும் இக்கட்டான சூழ் நிலைக்குத் தள்ளும்.

மக்களின் வாழ்க்கை நிலை மிக மோசமாகக் கீழிறங்கிச் செல்லும் இந் நிலையிலும், போருக்குக் கோடானு கோடி ரூபாவைச் செலவு செய்தே தீருவது என்று அரசாங்கத் தலைவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். சமாதானப் பேச்சுக்கான சூழ் நிலைகள் உருவாகி வருகிற போதிலும் போரை நிறுத்துவதற்கு இன்னமும் அவர்கள் மனங் கொள்ளவில்லை. போரை நிறுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்காமல் அதனைத் தொடர்வதிலேயே நாட்டம் கொண்டுள்ளனர். பொருத்தமான சூழ் நிலை இப்போது உருவாகியுள்ள போதிலும் அரசு அதனைச் சரிவரப்பற்றிக்கொள்ளும் என்று நம்ப முடியாதிருக்கிறது.

போரினால் நாட்டின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதனை பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், கணக்கு வாக்குக்கு நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை விளக்கமளித்துப் பேசுகையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

பாதுகாப்புச் செலவினம் அதிகரித்துச் செல்வதையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. கடந்த வருடத்தில் 5,200 கோடி ரூபாவென உத்தேசிக்கப்பட்ட போர்ச்செலவு 8,100கோடிரூபாவாக உயர்ந்து சென்றதாகத் தெரிவித்தார்.

இதன் பின்னரும் அரசாங்கம் போரை நாடி நிற்பது தமிழ் மக்கள் மீது மட்டுமன்றிச் சிங்கள மக்களின் வாழ்க்கை, நலனிலும் அதற்கு உள்ளார்ந்த அக்கறை இல்லை என்பதனையே எடுத்துக் காட்டுகிறது.

சமாதான முயற்சிகள் உரிய முறையில் முனைனெடுக்கப்படாவிடில் — போர் நிறுத்தப்படாவிடில் — மக்களின் பொருளாதார நிலை — வாழ்க்கை நிலை மேலும் சீரழிந்து பஞ்சம் பசி வந்து பேராபத்தைச் சந்திக்க நேரிடும்.

# இலங்கைக்கு ஆயுத உதவியை இந்தியா நிறுத்த வேண்டும்

## சந்திரசேகரன் எம். பி. வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 7

இலங்கைக்கு ஆயுத தளபாடங்கள் வழங்குவதை இந்திய அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான ப. சந்திரசேகரன் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு நேற்று அனுப்பி வைத்துள்ள அவசர பக்ஸ் செய்தியில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான சூழல் ஏற்பட்டு வருகின்றது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியமை மற்றும் பிரபாகரனின் மாவீரர் தின உரை என்பன இந்த நாட்டில் சமாதானம் ஏற்படப்போகின்றது என்பதற்கான நல்ல அறிகுறிகள்,

இந்த வேளையில் கடந்த திங்கட்கிழமை தங்களது அரசாங்கத்தினால் ஏவுகணை வசதி கொண்ட நவீன ரக யுத்தக் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் இந்த நாட்டில் சமாதான சூழல் ஒன்று உருவாவதைப் பலர் விரும்பவில்லை என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன.

அத்துடன் யுத்தச் சூழல் மேலும் தீவிரமடைய வழி வகுப்பதாக அமைந்து விடுகிறது—என்று அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(ஐ-7)

## ஒளி விழா

சண்டிலிப்பாய், டிசெ. 7

மானிப்பாய் செண். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளி விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

அதிபர் சகோதரி மே. த. லடிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் அருட்திரு. ரெக்ஸ் கொன்சன்ரைன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கிறிஸ்மஸ் செய்தியை வழங்குவார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

(ம-135)

* * *

யாழ்ப்பாணம், டிசெ. 7

யாழ். பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஒளி விழா எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ம-5)

* * *

சண்டிலிப்பாய், டிசெ. 7

மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய கிறிஸ்மஸ் ஒளி விழா இன்று வியாழக் கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கா. அழகரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம அதிதியாக சில்லாலை பங்குத் தந்தை அருட் திரு. ரெஜி இராஜேஸ்வரன் அடிகளார் கலந்து கொள்வார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

(ம-185)

## விமானத்தில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், டிசெ .7

குடாநாட்டுக்கான வான் கடிதங்கள் அடங்கிய 12 தபால் பொதிகள் விமானம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இங்கு சேகரிக்கப்பட்ட வான் கடிதங்கள் அடங்கிய 12 தபால் பொதிகள் இந்த விமானம்மூலம் கொழும்புக்கு அனுப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் தபால் பொதிகள் எடுத்துவரப்படுவதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளபோதும் இது தொடர்பாக இதுவரை தமக்கு எதுவித தகவலும் கிடைக்கவிலலை எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-6)



## சாயி சிந்தனை

மனது தூய்மையாக இருந்தால் வாழ்க்கையில் எதையும் சாதிக்கலாம். மனதைத் தூய்மையாக்க ஒருவன் பிரேம (அன்பு) தத்துவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் அன்பின் ஒளியை யாராலும் அணைக்க இயலாது பிரேம தத்துவத்தை வளர்த்துக் கொண்டால், நீ விஸ்வன், தைஜஸன், பிராக்ஞன் என்ற மூன்று நிலைகளையும் கடந்து முடிவிலுள்ள ஆனந்தத்தை அடையப் பெறுகிறாய் எந்த ஆன்மீகப் பயிற்சி மேற்கொண்டாலும் அதன் மூலம் மனம் தூய்மையடைய வேண்டும்.

ஆதாரம்: சனாதன சாரதி

# ஆங்கிலப் படிப்புகள் வட்டம் கருத்தரங்குகளை நடத்தும்

யாழ்ப்பாணம், டிசெ. 7

ஆங்கிலப் படிப்புகள் வட்டம் என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஞாயிறன்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையான ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிஅதிபர் ஏ.ஐ.பேர்ணாட், கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் எஸ். சுந்தரம்பிள்ளை ஆகியோர் இந்த அமைப்பின் ஆலோசகர்களாக இருப்பர்.

செயற்குழுவின் தலைவராக பலாலி ஆசிரியகலாசாலை முன்னாள் அதிபரும், ஆங்கில விரிவுரையாளருமான கவிஞர் சோ. பத்மநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ். வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் டி.ஆர். அருமைநாயகம், மன்னார் யாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் எஸ். செபநாயகம் ஆகியோர் உப தலைவர்களாகத் தெரிவாகினர்.

படிப்புகள் வட்டத்தின் செயலாளராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட போதனாசிரியரும் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகருமான வி. சுந்தரேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ். மாநகரசபை பிரதம களஞ்சிய பொறுப்பாளர் க. வேல்தஞ்சன் பொருளாளராகத் தெரிவானார்.

இவர்களை விட செயற்குழு உறுப்பினர்களாக ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது ஞாயிற்றுக்கிழமைகளில் கருத்தரங்குகளையும் பல் துறை நிகழ்ச்சிகளையும் நடத்த ஆங்கிலப் படிப்புகள் வட்டம் முடிவு செய்துள்ளது

(ஐ)

## வினாத்தாள்கள் வந்தன

குருநகர், டிசெ. 7

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு உரிய முதல் தொகுதி வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன.

(ஐ-51)

## பாராட்டு விழா

மானிப்பாய் லயன்ஸ் கழக ஏற்பாட்டில், சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களைப் பாராட்டும் விழா ஏ. இருதயநாதன் தலைமையில் இன்று வியாழன் பிற்பகல் 2 30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் மாவட்டத் தலைவர் அ. நல்லதம்பியும், கௌரவ விருந்தினராக பிராந்தியத் தலைவர் டாக்டர் வி. தியாகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. தனபாலசிங்கம், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் டாக்டர் எஸ். கே. சண்முகநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ம-90)

## நாளை

கார்த்திகை 23

வெள்ளிக்கிழமை

திதி: துவாதசி

முன் இரவு 7 .51 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

பிற்பகல் 1.41 வரை.

சுபநேரம்: 6. 18 – 7.48

ராகுகாலம்: 10.48 – 12.18

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நியமனக்கடிதம் வழங்குதல்

யாழ்ப்பாணம்.டிசெ.7

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று காலை 10.30 மணிக்கு வழங்கப்பட உள்ளன.

வலி.மேற்கு பிரதேசசபைத் தலைவரும், வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி அமைப்பாளருமான என். திரிலோகநாதன் நியமனக் கடிதங்களை வழங்குவார்

[ஐ-8]

## வீடுகளைப் பார்வையிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 7

அரியாலை, பாசையூர், கொழும்புத்துறை, குருநகர் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று வீடுகளைப் பார்வையிட படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள தமது வீடுகளைப் பார்வையிட விரும்புபவர்கள் நாளை காலை 9 மணிக்கு அவ்வப் பகுதி கிராம சேவையாளர்களால் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

யாழ் பிரதேச செயலகம் முன்பாக வைத்து இவர்களை அழைத்துச் செல்ல ஏற்பாடாகி உள்ளது.

யாழ்.மாவட்ட ஈ.பி டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே. விக்னேஸ்வரன் குகேந்திரன் எடுத்த நடவடிக்கையை அடுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

(ஐ-5)

**உதயவாக்கு**

அவசரமாய்த் தீர்மானித்தவன் விரைவில் வருந்துறான்.

-சைரஸ்-

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்

(ஓய்வுபெற்ற P. W. D. ஓவசியர் R. M, C, R, D, A.)

அன்னையின் மடியில்
24 - 07 - 1929

ஆண்டவன் அடியில்
25 - 11 - 1993

திதி: கார்த்திகைத்திங்கள்
பூர்வபட்ச ஏகாதசி

ஆண்டுகள் ஏழுசென்றிடினும், யுகங்கள் ஏழு சென்றிடினும் உங்கள் நினைவில் விநாயகக்கடவுளையும் வேழமுகக் கடவுள் தியானத்தில் உங்கள் அருள் பொலியும் மலர்ந்தி முகத்தையும் காண்கின்றோம். என்ன குறை வைத்தீர்கள் என்று எண்ணிப்பார்க்கின்றோம். எதுவுமே இல்லை நீங்கள் எம்முடன் இல்லை என்பதைத் தவிர. உங்கள் ஆன்மா இறை இன்பத்தில் இடையீறு இன்றி மூழ்கி நிற்கும் பெருவாழ்வு சித்திக்க செகராஜ சேகர விநாயகர் கழல்களைத் தொழுது நிற்கின்றோம்.

- குடும்பத்தினர்.

அன்பகம்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(81349)

# மரண அறிவித்தல்கள்

## வீரகத்தி வல்லிபுரம்

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி வல்லிபுரம் 05-12-2000 அன்று காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ் சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக்கணவரும், நாகேஸ்வரி, மகேஸ்வரி, தில்லைநாதபிள்ளை, இராசரட்ணம், சற்குணேஸ்வரி, குமாரசூரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுச்சாமி, காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் இராசலட்சுமி, புகனேஸ்வரி, இரத்தினசிங்கம் ஜெயசுஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (06-12-2000) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாவத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

துரை பேக்கரி அருகில்,
சூராவத்தை,
சுன்னாகம்.

(81339)

## செல்லையா மனுவேல்ராஜ்

இருபாலை, கானான் ஜெப ஆலயத்தைச் சேர்ந்த செல்லையா மனுவேல்ராஜ் நேற்று (06—12—2000) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சுறோஜினியின் அன்புக் கணவனாரும் சர்மிலா, மாலாஸ்டெலா, ஜெயராணி, ஜென்சிராணி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஜெபமலர், காலஞ்சென்ற கிங்சிலி ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரி, ரெட்ணசாமி ஆகியோரின் மைத்துனரும், ஜீவமலர், சாந்தி, வசந்தி, சுரேஷ், கீத்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வகுமார், சுமதி, தீபா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை கானான் ஜெப ஆலயத்தில் இன்று 7 ஆம் திகதி பி. ப. 3 00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரெட்ணசாமி
(மைத்துனர்)

கானான் ஜெப ஆலயம்,
இருபாலை.

(81342)

## சமுர்த்தி வலய அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 7

யாழ். பிரதேச செயலகத்துக்கான சமுர்த்தி வலய அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பிரதேச செயலர் ப. செந்தில் நந்தனன் தலைமையில் இந்தத் திறப்பு விழா நடைபெறும்.

(ம-5)

## தீட்சை வழங்கும் நிகழ்வு

வலிகாமம் தெற்கு.டிசெ. 07

வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் ஏழாலையில் உள்ள களபாவோடை ஸ்ரீவசந்தநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் தீட்சை அளிக்கப்படும்.

(ம-152)

## யுரேனியம் கல்வி நிலையம்

9, 10, 11 ஆம்
ஆண்டுக்கான புதிய
கல்வியாண்டு 2001
(09 - 12 - 2k1)
ஆரம்பமாகின்றது.
அனுமதிகள்
வரையறுக்கப்பட்டுள்ளன.

- நிர்வாகம்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.

(81348)

## கண்ணீர் அஞ்சலி

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர்
உயர்திரு. மு. பாக்கியநாதன்
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி தங்கத்துரை நாகரெத்தினம்

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர், பணியாளர்கள்,
(சி/14169) பனை அபிவிருத்திச் சபை.

## லயன்ஸ் கழகம் மானிப்பாய் வட்டம்

நடத்தும்

### கல்விசார் சேவை

சண்டிலிப்பாய்க் கோட்டத்தில்
2000 ஆண்டுக்கான 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய
மாணவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வைபவம்

இடம்: மெமோறியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய்.
காலம்: இன்று (07 - 12 - 2000) வியாழன் பி. ப. 2. 30 மணி.

பிரதம விருந்தினர்:
லயன் A. நல்லதம்பி அவர்கள்
மாவட்டத் தலைவர்—கல்வி அபிவிருத்தி, சர்வதேச லயன்ஸ் கழகங்கள்
மாவட்டம்: 306 B இலங்கை.

இவ் வைபவம் சிறப்புறச் சமூகப் பெரியோர்களை அன்புடன் அழைக்கிறோம்.

லயன்
A M. அருணாசலம்
செயல் திட்டத் தலைவர்

லயன்
A. இருதயநாதன்
கழகத் தலைவர்

சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.
A. சிவதாசன்
''கோகனதை வாசா''
(81311) சுதுமலை மத்தி, மானிப்பாய்.



## லயன்ஸ் கழகம் மானிப்பாய் வட்டம்

நடத்தும்

### கல்விசார் சேவைத்திட்டம்

2000 ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களை ஊக்குவித்தல்
சண்டிலிப்பாய் கோட்டம்
மாவட்டத் தலைவர் (கல்வி)
மாவட்டம்: 306B
சர்வதேச லயன்ஸ் கழகங்கள்

### லயன் A. நல்லதம்பி அவர்களின் வாழ்த்துச் செய்தி

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் குறிப்பாக எங்கள் மாவட்டத்திலுள்ள லயன்ஸ் கழகங்கள் ஆற்றவேண்டிய சேவைகளில் ஒன்றாக கல்விசார் சேவைகளையும் இணைத்து இச்சேவையை ஊக்குவிப்பதற்காக தனியாக ஒரு மாவட்டத் தலைவரையும் ஆளுநர் நியமித்துள்ளார். இந்த ரீதியில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் கல்விசார் சேவையில் பங்குபற்றுவதில் பெரு மகிழ்ச்சியும் பெருமிதமுமடைகின்றேன்

அதிக காலமாக போர்க் கால சூழ்நிலையில் சிக்குண்டிருக்கும் வடபிராந்தியத்தில் கல்வியின் முன்னேற்றம் தடைப்பட்டிருப்பது மிகவும் கவலைக்குரியது. இக்காலகட்டத்தில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் ஒவ்வோர் ஆண்டும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் முழு சண்டிலிப்பாய் கோட்டத்திலுள்ள பாடசாலையில் சித்தியடையும் மாணவர்களை ஊக்குவித்தும் பாராட்டிப் பரிசில்களும் வழங்கவென இவ்விழாவை நடத்தி வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய சிறந்த சேவையே. இந் நிகழ்ச்சி நிரலில் கோட்டத்தில் அதிக பெறுபேறுகளைப் பெற்ற முதல் மூன்று பாடசாலைகளுக்கும் அத்துடன் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கும் விசேடமாக கௌரவித்து உற்சாகப்படுத்துவதும் கல்வி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்குகின்றன.

இவ்வாறான வைபவத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதோடு இக்கழகத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட இணுவில் லயன்ஸ் கழகம் பின்பற்றி நடத்துவது போல் ஏனைய கழகங்களும் இவ்வாறான கல்விசார் சேவையை விஸ்தரிக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன். இவ்விழாவை மிகச் சிறப்பாக வருடந்தோறும் தவறாது நடத்தி வரும் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரை பெரிதும் போற்றுகிறேன்

லயன் A. நல்லதம்பி
மாவட்டத் தலைவர் - கல்வி.

T. R. R. O. OFFICE,
மானிப்பாய் றோட், உரும்பிராய்.

(81346)

# சமாதான முயற்சிகளில் இலங்கை நிதானமாகவே செயற்படுகிறது

## இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.7

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நோர்வே அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து இலங்கை அரசு ஒரு வருடத்திற்கு முன்னர் நம்பிக்கையீனமாக - அசிரத்தையாக - இருந்தபோதும், தற்போது வெகு நிதானமாகச் செயற்பட்டு வருகிறது. இது தொடர்பாக இந்திய அரசும் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி புரிந்துணர்வுடன் நடந்து வருகிறது.

இந்தியாவிற்கான இலங்கையின் புதிய தூதர் சேனக்க பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டு செய்தி ஊடகங்களுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு உறுதுணை அளிப்பதன் மூலம் இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத் தீர்வு ஒன்றை எட்டுவதே இலங்கை அரசின் தற்போதைய நிலைப்பாடு என்றும் - அவர் கூறினார்.

(ம-8)



வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் தலைமைத்துவப் பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தலைமைத்துவப் பயிற்சிநெறியை பிரதேச செயலர் நா.வேதநாயகன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போல், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.தியாகமூர்த்தி ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். *(வலி.மேற்குச் செய்தியாளர்)*

# தீவக வலயப் பாடசாலைகளில் 180 ஆசிரியர்களுக்கு வெற்றிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

தீவக வலயப் பாடசாலைகளில் 180 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாகவும் இதனால் மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் பின்தங்கிய நிலையை அடைந்துள்ளதாகவும் தீவகக் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஒரு வருட காலமாக நிலவும் இந்த ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக உயர் அதிகாரிகளிடம் பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளபோதும் இதுவரை உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தீவகப் பாடசாலைகளில் கடமையாற்றும் 17 ஆசிரியர்கள் யாழ்.வலய பாடசாலைகளுக்கு இடமாற்ற விண்ணப்பம் கொடுத்ததை அடுத்து அவர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை -

தீவகப் பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்களில் 80 பேர் ஆசிரியர் கலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்டு அங்கு கற்பதற்குச் சென்றுவிட்டதனாலேயே இவ்வாறு அதிக வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. எனினும் மாணவர்கள் தொகையுடன் ஒப்பிடும்போது நீண்ட காலமாகவே 83 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வந்துள்ளமையையும் கல்வி வலய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இந்த நிலையில் தற்போது இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் எவரும் தீவகப் பாடசாலைகளில் கடமையாற்ற முன்வருவதில்லை என்றும் இதனாலேயே அங்கு ஆசிரியர்களை நியமிப்பதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மேலதிக மாகாண கல்வி பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்மாவட்டத்தில் உள்ள வசதி கூடிய பாடசாலைகளில் ஆறு வருடத்திற்கு மேல் கடமையாற்றும் ஆசிரியர்களை பற்றாக்குறை நிலவும் கல்வி வலயங்களுக்கு இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(ம-6)



சிறுவர், முதியோர் தின விழா ஒக்ரோபர் மாதக் கடைசியில் யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. சிறுவர் பாதுகாப்பு நிதியைச் சேர்ந்த திருமதி ஓ.ஜி.அல்பிரட் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், வண. பிதா எவ்.ஜே.இராசநாயகம், கே.வி.சிவனேசன் ஆகியோர் அருகில் உள்ளனர். (ஐ)

## இலவச மருத்துவ முகாம்

மானிப்பாய்,டிசெ.7

மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகாரச் சபையால் வாராந்தம் மானிப்பாய் மெடி கிளினிக்கில் நடைபெறும் நீரிழிவு, இரத்தநோய் ஆகியவற்றுக்கான இலவச சிகிச்சை முகாம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். அன்றைய தினம் நோயாளர்களுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ம-90)

## ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்கள் மீண்டும் தனிப்பட்ட முகவரிக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.7

நல்லூர் பிரதேச செயலகம் ஊடாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்கள் இந்த மாதம் முதல் மீண்டும் ஓய்வூதியர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கே அனுப்பி வைக்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா அறிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக குடாநாட்டில் நிலவி வந்த அசாதாரண சூழ்நிலையை அடுத்து மேற்படிப் பிரதேச செயலகம் மூலமாக ஓய்வூதியம் பெறுவோர் பலர் இடம்பெயர்ந்திருந்தனர் எனவும் -

இதனை அடுத்து ஓய்வூதியர்களின் பற்றுச்சீட்டுக்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும்-

பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# பிரபாவை ஒப்படைக்குமாறு கேட்பது இந்தியாவின் கையாலாகாத்தனமே!

## சென்னன் கூறுகிறார்

பிரபாகரனைக் கைது செய்து தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோருவது மனிதாபிமானமற்ற செயலாகும். இது இந்தியாவின் கையாலாகாத்தனத்தையே காட்டுகிறது. இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ள எமது பிரதமரின் துணிச்சலைப் பாராட்டவே வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் பதுளை மாவட்ட முன்னாள் எம்.பி.யும் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவருமான டி.வி சென்னன்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவருமான டி.வி.சென்னன் பதுளை நகர மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற மேற்படி முன்னணியின பதுளை மாவட்ட அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுகையிலே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி அகிம்சை வழியிலேயே பிரச்சினைகளை அணுக முயல்கிறது என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ் உரையாற்றுகையில்: "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இணக்கப்பாடொன்றை ஏற்படுத்த வேண்டும். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு புலிகள் இயக்கத்தினர் விருப்பம் தெரிவித்ததே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நல்லதொரு சமிக்ஞை ஆகும். இதை இலங்கையின் அனைத்து கட்சிகளும் நன்கு பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் முகாம் தமிழ்க் கைதிகள் கொலை தொடர்பாக சுதந்திரமான விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி நானும் தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியும் அரசைக் கோரியுள்ளோம். மீண்டும் நடைபெறவுள்ள நாடாளுமன்ற விசேட அமர்விலும் இந்தக் கோரிக்கையை நடைமுறைப்படுத்த வலியுறுத்தவுள்ளோம் - என்றார்.

(இ-4)

## தேர்தல் கடமை புரிந்தோருக்கு இன்று முதல் கொடுப்பனவுகள்

குருநகர்,டிசெ7

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், தேர்தல் கடமை புரிந்த யாழ். கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் இயங்கி வரும் யாழ். கல்வி வலயப் பணிமனையில் வைத்து பணமாக வழங்கப்பட உள்ளதாக யாழ். கல்வி வலயம் தெரிவித்துள்ளது.

இன்று வியாழக்கிழமை நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகளும், நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப்பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகளும், நாளை மறுதினம் சனிக்கிழமை கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

இன்றும் நாளையும் இக்கொடுப்பனவுகள் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 5.00 மணி வரையும் வழங்கப்படும். சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை வழங்கப்படும்.

இன்றும் நாளையும் இக்கொடுப்பனவைப் பெறத் தவறியவர்கள் சனிக்கிழமை வந்து பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-51)

## சங்கீத சபைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.7

வட - இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் தமது விண்ணப்பப் படிவங்களை இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(இ-10)


கப்பல் மூலம்

கொழும்பு செல்கின்ற பயணிகளுக்கு!

ஏ.பி.எஸ். – ரவல்ஸ் சேவையினரின்

திருகோணமலை - கொழும்பு,
கொழும்பு - திருகோணமலை
பயண ரிக்கெட் பெறும் இடங்கள்:

யாழ்.நகரில் : மக்மிலன் புத்தகசாலை
இல.3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. : 021-2422

கொழும்பில் : மக்மிலன் புத்தகசாலை
இல.195, ஒல்கோட் மாவத்தை, கொழும்பு – 11.
தொலைபேசி இல. : 449565, 331122

சான் கொம்
பீச் றோட், இல.15/3 கொழும்பு – 11.
தொலைபேசி இல. 01–334245, 342253
074–718724, 721496

திருகோணமலையில் :- கொழும்பு ஏஜென்சி
No .220, கஸ்ரம்ஸ் றோட்,
திருகோணமலை.
T.P. : 026–23249, 026–24635

இன்று (07.12.2000) வியாழக்கிழமை முதல் ரிக்கெட் பெற்றுக்கொள்ளலாம்.

(C/14170)



சுன்னாகத்தில் கடை மற்றும் காணி உடன் விற்பனைக்கு உண்டு

பின்வரும் கடைகள் மற்றும் காணிகள் உடன் விற்பனைக்கு உண்டு.

(1) சுன்னாகம் சந்திக்கு அண்மையில் காங்கேசன்துறை வீதியில் 18ஆம், 19ஆம் இலக்கங்களைக் கொண்ட 2 விசாலமான கடைகள் சிறிய காணி இடவசதியுடன்.

(2) சுன்னாகம் தபால் நிலையத்துக்கு முன்பாக சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் 20 பரப்புத் தோட்டக் காணி.

உடன் தொடர்பு கொள்க:-

விளம்பர இலக்கம்: 1151
மே/பா - உதயன்,
யாழ்ப்பாணம்.

(81354)



பருத்தித்துறை நகராட்சி மன்ற அறிவித்தல்

பொழுதுபோக்குக் கழகம் அமைத்தலுக்கான ஆட்சேபனை பெறல்

புலோலி கிழக்கு, பருத்தித்துறையில் வதியும் திரு. சுப்பிரமணியம் கனகசுந்தரம் வாசன் என்பவரது ஆதன இல.525, பிரதான வீதி, வட்டார இல.09, மதுபானசாலையையும் உள்ளடக்கிய பொழுதுபோக்குக் கழகம் அமைப்பதற்கான அனுமதியைப் பெறும் பொருட்டு எனக்கு விண்ணப்பித்துள்ளார்.

இப் பொழுதுபோக்குக் கழகம் அமைப்பதற்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் இது தொடர்பான ஆட்சேபனையை இந்த அறிவுறுத்தல் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் எமக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சி.கமலேஸ்வரன்,
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை

*நகராட்சி மன்ற அலுவலகம்,*
*பருத்தித்துறை.*
*05.12.2000*

(C/14171)

# படைக்கு ஆள் சேர்க்கும் கால எல்லை நீடிப்பு

கொழும்பு,டிசெ.7

இராணுவத்துக்குப் புதிதாக ஆட்சேர்க்கும் கால எல்லை எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. ஒரு மாத காலத்தில் புதிதாகப் பதினையாயிரம் பேரைச் சேர்ப்பதற்கு இராணுவத்தலைமையகம் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் எதிர்பார்த்த அளவுக்குப் பயனளிக்கவில்லை என இராணுவத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 25 ஆம் திகதியுடன் முடிவடைந்த - காலக்கெடு விதிக்கப்பட்ட - இந்த ஒரு மாத காலப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான ஆள்சேர்ப்பு நிலையங்களில் மேற்படி பணி மேற் கொள்ளப்பட்டது.

ஆனால், இந்த முயற்சியின் பயனாக ஒரு சில ஆயிரம் பேரையே இராணுவத்துக்குப் புதிதாகச் சேர்க்க முடிந்ததாகக் கூறப்படுகின்றது.

மேற்படி ஆள் சேர்க்கும் பணி கவர்ச்சிகரமான சுவரொட்டிகள் மற்றும் பிரசாரங்களுடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-8)

# கொழும்புத்துறை சிவன் ஆலய கண்டாமணி திருடப்பட்டது!

அரியாலை,டிசெ.7

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியில் அமைந்திருக்கும் சிவன் கோயிலில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

ஆலயத்தின் மணிக்கோபுரத்தில் இருந்த கண்டாமணி மற்றும் பித்தளைப் பொருள்கள், ஆலய கூரை ஓடுகள் என்பனவே சூறையாடப்பட்டுள்ளன.

இந்த ஆலயத்துக்குச் சென்று பார்வையிடுவதற்கு ஆலய நிர்வாகிக்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியதாகவும் இதனை அடுத்து நிர்வாகி ஆலயத்தைச் சென்று பார்வையிட்ட போது இந்தப் பொருள்கள் களவாடப்பட்டிருப்பது தெரிய வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

PERSONAL CLASSES
COMPUTER STUDiES
MCI
உத்தியோகத்தர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளும், சிறுவர்களுக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.
ஸ்ரீ கந்தசாமி கோயில் தெற்கு வீதி,
இணுவில்.
(81241)

## தொடர்பு கொள்ளவும்

கடந்த 01-12-2000 வெள்ளிக்கிழமை அன்று இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பலாலிக்கு வந்து சேர்ந்த பயணிகள் விமானத்தில் பயணம் செய்தவர்களில் தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணக் கிளையில் கடமையாற்றுகின்ற ம.சிவானந்தா (முகாமையாளர்) ஆகிய நானும் ஒருவர்.

என்னுடன் பயணம் செய்தவர்களில் விமான நிலையத்துக்கு வீடியோ கசட்டுடன் வந்தவர், தனது வீடியோ கசட்டுக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அதனைத் திருப்பிக் கொடுத்து விடுவதற்காக ராஜன் என்பவரையும் இரத்மலானை விமான நிலையத்துக்குக் கூட்டி வந்திருந்தார். மேற்படி ராஜன் என்பவர் என்னிடம் தந்த பொருளைப் பெறுவதற்கு, மேற்படி வீடியோ கசட்டுடன் யாழ். வந்த பயணி உடனடியாக வந்து தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:
ம.சிவானந்தா
தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணம்.

(81340)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் சிவலிங்கம் சத்தியகுமார்**
(சிவா)

மலர்வு 12-03-1974
உதிர்வு 07-11-2000

எங்கள் அன்புத் திருவுருவின் மறைவையொட்டி நேரில் வந்தும், தொலைபேசி, தபால், தந்தி மூலமும், மலர்வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலி மூலமும் அனுதாபம் தெரிவித்தும் ஆறுதல் கூறியும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 07-12-2000 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிநிற்கும்*

*சிவன் தொலைத் தொடர்பு நிலையம்*
*G.P.S றோட்,*
*கல்வியங்காடு.*

அன்பு நிறைந்த
**பொ.சிவலிங்கம்**
குடும்பத்தினர்.

(81334)

# கிரிக்கெட் விளையாடத்தடை

புதுடில்லி,டிசெ.7

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் முஹமட் அஸாருதீன், அஜய் சர்மா ஆகியோர் வாழ்நாள் முழுவதும் கிரிக்கெட் விளையாடுவதற்கு இந்தியக்கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தடை விதித்துள்ளது.

அணியின் முன்னாளவீரர் அஜய் ஜடேஜா, அணியின் முன்னாள் மருத்துவர் அலி ஈரானி ஆகியோருக்கு தலா இரண்டு ஆண்டுகள் கிரிக்கெட் ஆட்டங்களில் பங்குபற்றத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (உ-8-6)

# முதியோருக்குத் தனியான சிகிச்சைப்பிரிவு

வடமராட்சி,டிசெ.7

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் முதியோர்கள் சிகிச்சை பெறுவதற்கென தனியான பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-173)

# 31 பகுதி நேர விரிவுரையாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 31 பகுதிநேர விரிவுரையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

உடற்கல்வி கற்கைநெறிப் பிரிவுக்கு 19பகுதிநேர விரிவுரையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கலைப்பீடத்துக்கு 12 பகுதிநேர விரிவுரையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ம-6)

# ஜி.சீ.ஈ.பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

வலிகாமம் தெற்கு,டிசெ.7

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையின் பரீட்சை இணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், சாதாரண நோக்குநர்கள் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கோட்ட ரீதியாக வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெற உள்ளன.

உடுவில் கல்விக் கோட்டத்துக்கான கூட்டம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் சண்டிலிப்பாய்க் கோட்டத்துக்கான கூட்டம் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் நடைபெற உள்ளன.

முன்னரைப போலன்றி இம்முறை சாதாரண நோக்குநர்களும் இந்த அறிவுறுத்தல் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-152)

## வீதிகள் புனரமைப்பு

மானிப்பாய் வடக்கு உச்சியோடைக் கிராம வீதிகள் விரைவில் திருத்தப்பட உள்ளன. இது தொடர்பாக வலி.தென்மேற்குப் பிரதேச சபைத்தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், அப்பகுதி கிராம அபிவிருத்திச் சபைத் தலைவரிடம் உறுதியளித்துள்ளார். (இ-90)

# மண்டைதீவுக் கடலில் ஐந்து மீனவர்கள் கைது

மண்டைதீவுக் கடலில் கடந்த சனிக்கிழமை அதிகாலை மீன்பிடித்துக கொண்டிருந்த ஐந்துமீனவர்கள கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவற்கட்டைச் சேர்ந்த கு.வசந்தன்(வயது 22), அ.நாகதீசன்(வயது 25),ச.தங்கமயில (வயது23),த.விஜயகுமார்(வயது23), நா.புலேந்திரராசா (வயது23) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை -

சங்கானை ஓடக்கரை வீதியைச் சேர்ந்த கந்தையா ஜெயவதனச்சந்திரன்(வயது21) என்ற இளைஞன் கடந்த ஒருவார காலமாகக் காணாமல் போயுள்ளார் என அவரது பெற்றோரால் மேற்படி அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-7-100-173)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல் - 2001

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் 2001ஆம் ஆண்டு முழுவதற்கும் கீழே குறிப்பிடப்படும் பாதுகாப்பு நிலையங்களை அமைத்து நடத்துவதற்கு கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்
2. மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

நகரசபை அலுவலகத்தில் மீளளிக்கப்படக் கூடியதான கேள்விப் பணமாக 500/- ரூபாவையும் படிவக்கட்டணமாக 100/- ரூபாவையும் 20-12-2000 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதன் பிரகாரம் வழங்கப்படும் படிவத்தில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு 21-12-2000ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னதாக கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 22-12-2000 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

***நிபந்தனைகள்:-***

1. விண்ணப்பத்துடன மேலே குறிப்பிட்ட விடயம்1, விடயம்2 நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்தினது மாதிரிக் காணியின் வரைபடமும் உரிமையாளரின் எழுத்து மூலமான அனுமதிக் கடிதமும் இணைக்கப்படல் வேண்டும்.
2. ஆகக்குறைந்த கேள்வித் தொகையாக துவிச்சக்கர வண்டி/மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்துக்கு (பஸ்/மினிபஸ் தவிர்ந்த) ரூபா 40,000/- அமைந்திருத்தல் வேண்டும்.
3. வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத் தலைவரினால் பணிக்கப்படும் கட்டண விகிதங்களே அறவிடப்படல் வேண்டும்.
4. ஆலய சுற்றாடலில் சிவில் நிர்வாக ஒழுங்கமைப்புத் தொடர்பான வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் தலைவர்/செயலாளரினால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு அமைவாகச் செயற்படுதல் வேண்டும்.
5. கேள்விகளை ஏற்கவும், நிராகரிக்கவும் பூரண அதிகாரம் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத் தலைவருக்கு/செயலாளருக்கு உண்டு.
6. மேலதிக விவரங்களை காரியாலயக் கடமை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

எம்.கே.சிவாஜிலிங்கம்
தலைவர்
*நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.*

*நகராட்சிமன்ற அலுவலகம்*
*வல்வெட்டித்துறை. 05-12-2000*

(C/14165)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் 2001ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01.01.2001 தொடக்கம் 31.12.2001 வரையிலான காலப்பகுதிக்கு வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி மீன் சந்தையை (தற்காலிகமாக) நடத்துவதற்கான கேள்விகள் 20.12.2000 ஆம் திகதி காலை 10.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்று பி.ப.14.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

| ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
| --- | --- | --- |
| 7000/- | 500/- | 100/- |

மேற்படி வைப்புப் பணமும் கேள்விப் படிவக் கட்டணமும் பணமாகச் செலுத்தப்படுவதன் பேரில் 18.12.2000ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. கேள்வியை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்குப் பூரண உரிமையுண்டு.

எவரும் உரிய கேள்விப்படிவங்களை 18.12.2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பெறத் தவறினால் 20.12.2000 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் என்னால் குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களை அலுவலக கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எம்.கே.சிவாஜிலிங்கம்,
தலைவர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

*நகராட்சிமன்ற அலுவலகம்,*
*வல்வெட்டித்துறை. 05.12.2000*

(C/14166)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

உ
வதிரி காளையந் தோட்டம்
திருவருள் மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருக்கோயில்

## மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

காலம்:- இன்று 07.12.2000 வியாழக்கிழமை
முற்பகல் 10.05 மணியளவில்
நவோத்திர சங்காபிஷேகம்
மாலை 4.30 மணியளவில்
திருவூஞ்சலும் திருவிழாவும் நடைபெறும்.
சங்காபிஷேகப் பிரதமகுரு:
சிவஸ்ரீ சிவ கிருபாகரக்குருக்கள்
(பிரதமகுரு, திருநெல்வேலி முத்துமாரியம்பாள் தேவஸ்தானம்)
*சிறப்பு நிகழ்ச்சி:*
நண்பகல் 12.30 மணியளவில்
மேற்படி ஆலய
*பிரதமகுருக்கள் சிவஸ்ரீ* பால சோமசுந்தரக் குருக்கள்
அவர்களின்
*சேவையைப் பாராட்டி*
பதக்கம் அணிவித்து பொற்கிழி வழங்கும் வைபவம்
இடம்பெறும்.

*வதிரி*
*ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோயில்.* (81312)
இங்ஙனம்
அறங்காவலர் குழு

## கௌரவிப்பு விழா அழைப்பு

### ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்களின் கௌரவிப்பு

முதியோர்களைக் கௌரவிக்கும் பாரம்பரியத்துக்கமைய நிகழ்கால வங்கி ஊழியர்கள் ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வானது 'வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன்' எதிர்வரும் 9.12.2000 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

**இடம் : வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்**
(வர்த்தக வங்கி லிமிட்டெட்டுக்கு அருகில்)
**நேரம் : காலை 9.30 தொடக்கம் 1.00 மணி வரை.**

*பிரதம விருந்தினராக*
திரு.து.வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர்)
கலந்து சிறப்பிப்பார்.

ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்கள் அனைவரையும் இந் நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கௌரவம் கலந்த அன்புடன் அழைக்கின்றோம்.

ந.சிவரத்தினம்
*செயலாளர்-வங்கியாளர் சங்கம்,*
*யாழ்.மாவட்டம் சார்பாக;*
(80985)

பருத்தித்துறை, பன்னையம்பதி
அருள்மிகு ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் திருக்கோயில்

## கும்பாபிஷேகம்

நாளை (8.12.2000) வெள்ளிக்கிழமை காலை 7.00மணி தொடக்கம் 8.30 மணி வரையிலான சுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு
சிவாகமகிரியா தத்துவ நிதி
பிரம்மஸ்ரீ தாணு.வாசுதேவக் குருக்கள்
(சிவன் கோயில் - இணுவில்.)

பிரம்மஸ்ரீ இ.வரதராஜக் குருக்கள்.
தர்மகர்த்தாவும்
ஆலய பிரதம குருவும்
(81262)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1938 - 12 - 30



உதிர்வு
1999 - 12 - 07

### திருமதி சர்வேஸ்வரி சிவலிங்கம்

அன்புள்ளம் கொண்ட தெய்வமே!
ஆறாத்துயரில் எம்மை விட்டு
ஆண்டொன்று மறைந்ததம்மா!
ஆனாலும், உங்கள் அன்பு முகம் மறவோம்.
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*3ஆம் கட்டை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (81291)
- குடும்பத்தினர்.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நேர்முகப்பரீட்சை

குருநகர்,டிசெ.7

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்து எழுத்து மூலப்பரீட்சைக்குத் தோற்றியோருக்கான நேர்முகப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைகக்கப்பட்டோர் தேசிய அடையாள அட்டை, கல்விச்சான்றிதழ்கள், குறிப்பிட்ட பாடம் தொடர்பாக நிருபிக்கக் கூடிய வேறு சான்றிதழ்கள், கிராம அலுவலரின் நற்சான்றிதழ், ஏனைய நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் மூலப்பிரதிகள் மற்றும் போட்டோப் பிரதிகளுடன் வருகை தரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-51)

## தையல் இயந்திரங்கள் திருட்டு

நெல்லியடி,டிசெ.7

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த நேரம் தையல்கடை ஒன்றின் கூரையைப் பிரித்து உள்புகுந்த திருடர்கள், அங்கிருந்த 3 தையல் இயந்திரங்கள், துணிவகைகள் போன்றவற்றைத் திருடிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு துன்னாலை வடக்கு அல்லையம்பதி என்ற இடத்தில் இடம்பெற்றது.

பளையிலிருந்து இடம்பெயர்ந்து இப்பகுதியில் தையல்கடையை ஆரம்பித்திருந்த இ.மதன் என்பவரின் சுமார் 25ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களே இவ்விதம் திருடப்பட்டிருப்பதாக பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது. (ம-109)

## மற்றொருவருக்கு டெங்குக்காய்ச்சல் அறிகுறி

யாழ்ப்பாணம்,டிசெ.7

டெங்குக்காய்ச்சலுக்கான அறிகுறியுடன் மேலும் ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆவரங்காலைச் சேர்ந்த கே.சேதுராமன் (வயது30) என்பவரே டெங்குக காய்ச்சலுக்குரிய அறிகுறிகளுடன் கடந்த 2ஆம் திகதி சனிக்கிழமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இவருக்கு டெங்குக்காய்ச்சலுக்கான மேலதிக பரிசோதனை நடவடிக்கைகள் யாழ்.ஆஸ்பத்திரியில் நடத்தப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே கடந்த 30ஆம் திகதி டெங்குக்காய்ச்சல் அறிகுறிகளுடன் சிறுவன் ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (இ-7-15-139)

## சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

வலி.கிழக்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட இருபாலை கிழக்கு ஜே/258 கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்திச் செயலணி அமைக்கும் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலய மண்டபத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சேவற்கொடியோன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும சமுர்த்தி முகாமையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இருபாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகளை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

வலி.கிழக்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் மேற்கு ஜே/263 கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்திச் செயலணி அமைக்கும் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராய் சந்திரோதய மகாவித்தியாலய மண்டபத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கர்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் சமுர்த்தி முகாமையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். உரும்பிராய் மேற்குப் பகுதியைச் சேர்ந்த 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகளை இக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தின்

## முழு நிலா நாள் நிகழ்வு

நிறுவன ஆதரவில்
தொண்டமானாறு வெளிக்கள நிலையத்துடன்
இணைந்து நடத்தும்

## பாதீனியம் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - குமாரசுவாமி மண்டபம்
காலம் : 10.12.2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி (புதிய நேரம்)
தலைவர் : திரு.க.சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்;
தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்)
ஒருங்கிணைப்பாளர் : திரு.க.சி.குகதாசன்
(யாழ். இந்து முன்னாள் அதிபர்; தலைவர், தொண்டமானாறு
வெளிக்கள நிலையம்)

**நிகழ்ச்சி நிரல்:**

| | |
|---|---|
| 3.00 - 3.30 | காட்சிப் பொருள்களைப் பார்வையிடல் |
| 3.30 - 3.45 | தலைமையுரை |
| 3.45 - 4.15 | "பாதீனியமும் சூழலும்" திரு.க.சி.குகதாசன் M.Sc. |
| 4.15 - 4.45 | "பாதீனியம் - உருவவியல்" திருமதி ஜெ.நந்தகுமார் M.Phil. (சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்) |
| 4.45 - 5.15 | "பாதீனியமும் விவசாயமும்" திரு.கு.மிகுந்தன M.Phil. (தலைவர், விவசாய உயிரியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்) |
| 5.15 - 5.45 | கலந்துரையாடல் |
| 5.45 - | நன்றியுரை; நிறைவு |

(நிகழ்வுகள் நேர ஒழுங்கின்படி நடைபெறும்)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். குடாநாட்டின் விவசாயத்துறை அதிகாரிகளையும் மற்றும் கமக்காரர்களையும் வருகை தருமாறு விநயத்துடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.
(C/14184)

## குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்தும் தனி நடிப்புப் போட்டி - பரிசளிப்பு

மேற்படி நிகழ்ச்சிகள் யூனியன் கல்லூரி மண்டபத்தில் (மருதனார்மடம்) எதிர்வரும் 10-12-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 1.00 மணிவரை நடைபெறும்.

*தலைவர்:*
கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
*சிறப்பு விருந்தினர்:*
திரு.து.வைத்திலிங்கம் அவர்கள்
(மேலதிக அரசாங்க அதிபர்)
*விசேட விருந்தினர்கள்:*
திருமதி கோகிலா மகேந்திரன்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வடக்கு)
சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் அவர்கள
(வருகை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.த.சீவரத்தினம் அவர்கள்
(இலங்கைவங்கி, காங்கேசன்துறை)
சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை அவர்கள்
(இளைப்பாறிய அதிபர்)

போட்டியில் தோன்றும் பாத்திரங்கள்: ஒதெல்லோ, இயாகோ, கோபோ, லான்சிலாட், ஷைலக், டெஸ்டிமோனா, சகுந்தலை, திரௌபதை, கைகேயி, கண்ணகி, சந்திரமதி உட்பட 20 பாத்திரங்கள்.

ஏ.ரி.பொன்னுத்துரை
சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.
(81255)


MATHS CENTRE
M.M.V.Road, Nelliady.

A/L 2001
DAY CLASS
*(கலை, வர்த்தகம்)*
வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களின்
நன்மதிப்பைப் பெற்ற ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| ※ பொருளியல் | - | திரு. அன்ரனி |
| ※ அளவையியல் | - | திரு. பிரபானந்தன் |
| ※ தமிழ் | - | திரு. கமலரூபன் |
| ※ இந்து நாகரிகம் | - | திரு. ராஜேஸ்கண்ணா |
| ※ அரசியல் | - | திரு. சந்துரு |
| ※ நாடக. அரங்கியல் | - | திரு. பிரதீபன் |
| ※ கணக்கீடு | - | திரு. பார்த்தீபன் |
| ※ வணிகக்கல்வி | - | திரு. உதயமோகன் |

ஆரம்பம்: 11.12.2K திங்கள்
6.30 a.m. (ப.நே)
அனுமதிகள் முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
(81237)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

ரியூசன் சென்ரர் ஒன்றுக்கு மேற்பார்வையாளர் ஒருவர் தேவை. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- இல 18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (81318)

### தவறிவிட்டது

பத்மநாதன் காந்தராஜ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 751523360V ) மற்றும் விசேட அடையாளஅட்டை என்பன மானிப்பாய்க்கும் சுண்டிக்குளிக்கும் இடையில் 02-12-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 22/6, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.(81326)

### COMPUTER FOR SALES

**Pentium III Computer, Printers, CDROMS, Computer Books, Lecture Hall/Office Chairs, 3KV Yenmar Generator. Contact:- S.Senthuran," Sathiya Giri" (Near Sivakami Amman Kovil) Inuvil East, Inuvil.**

(81325)

## பாலர் பாடசாலை கலைவிழா

வலிகாமம் தெற்கு,டிசெ.7

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் பாடசாலை ஒன்றுகூடல் நிகழ்வும் கலைவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு க.சத்தியசீலன் தலைமையில் பாலர் பாடசாலை முன்றலில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ம.மகேசனும் சிறப்பு விருந்தினர்களாக கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆசிரியர் வி.பரிபூரணானந்த சர்மா, மன்ற இணைப்பாளர் இ.சீலன் ஆகியோரும் கலந்து கொள்வர். பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ம-152)

## மிதி வெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ். பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான மிதி வெடி விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற உள்ளன.

யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் இந்தப் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைப்பார். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர்களான டாக்டர் என். சிவராஜாவும் டாக்டர் சி.எஸ்.நச்சினார்க்கினியனும் திருமதிபொன்மலர் இராஜேஸ்வரன் ஆ.வாசவன், பெ. நிர்மலா, தி.வசந்தகுமார், திருமதி தர்சினி மகேந்திரன் ஆகியோரும் விரிவுரைகளை நிகழ்த்த உள்ளனர். (ம-5)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

கொக்குவில் மற்றும் தீவக லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் இலவச மருத்துவமுகாமும் அபிவிருத்திக் கருத்தரங்கும் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10 மணிக்கு புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

காலை 10 மணி முதல் ஒரு மணி வரை கண்பரிசோதனையும் பொது மருத்துவ பரிசோதனை என்பன இடம்பெறும். தொடர்ந்து 2 மணிக்கு கருத்தரங்கு நடைபெறும். (ம-5)

## கனடா பயணமானார்

கனடாவில் நடைபெற உள்ள சைவ மாநாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச.நா.தனிகாசலம்பிள்ளை கலந்து கொள்வார்.

எதிர்வரும 12ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை நடைபெற உள்ள இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள் வதற்காக அவர் கனடா புறப்பட்டுள்ளார். இந்த நிகழ்வில் அவர் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றுவார். (இ-8-5)

## துறைமுகத்தில் அணைகட்டும் பணி

நெல்லியடி,டிசெ.7

கடல் அரிப்பைத் தடுக்கும் வகையில் பருத்தித்துறை துறைமுகப் பகுதியில், அணைகட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்பினால் இங்கு கடல் அரிப்பு ஏற்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-109)

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

ஆண்டவனின் படைப்பு 22 - 05 - 1967



அரக்கனின் அழிப்பு 24 - 10 - 2000

அமரர்

### கிருஷ்ணபிள்ளை அருந்தவச்செல்வம்

(செல்வம்)

(சாளினி மரத்தொழிலக உரிமையாளர்)

வானத்து வெண்ணிலா இன்று
அஸ்தமித்துப் போனது ஏன்?
குதூகலச் சிரிப்பு இன்று
அடங்கி விட்டதுமேன்?
சிரிக்கின்ற உன் அன்புள்ளங்கள் எல்லாம்
கண்ணீர் வடித்திடவே - நீ
ஒரு வார்த்தை கூறாமல்
நித்திரைக்குச் சென்று விட்டாய்!
அன்புக்குச் சரிநிகர் உனக்கு நியேதானையா!
வாழ்விலும் தாழ்விலும் எம்முடனே
பாசு விளக்காய் ஒளிர்ந்தவனே!
நாம் செல்வமென கதறுகின்ற ஒலி மட்டும் - நின்
கல்லறையில் கேட்கின்றதோ - உனை
மறந்து தான் நாம் வாழ முடியுமோ?
இப்புவியில் நாம் வாழும் வரை
உனை மறவோம்....

உமது பிரிவால் வாடும்
**மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

*துரைவீதி, இணுவில்தெற்கு, இணுவில்.* (81350)

## பதின்மூன்றாவது ஆண்டு நினைவு நாள்



### அமரர் வே.தணிகாசலம் (அதிபர்)

(குருமாமணி)

மலர்வு 12-09-1928 உதிர்வு 07-12-1987

கல்வியிலே நீங்கள் சிறந்து
கலைகளுக்குப் பல வித்திட்டீர்கள்
பக்தியிலே நீங்கள் ஓங்கிப் பாதைகள் பல
வகுத்திட்டீர்கள் - எம்
உள்ளத்திலே நீங்கள் என்றும் ஒளிவிளக்காய்
சுடர்விட்டீர்கள்
பதின்மூன்றாண்டுகள் சென்றாலும் - எம்
உள்ளம் உமை மறவாதையா!

உங்கள் பாசத்துடன் நினைவு கூரும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*இராஜஸ்தலம், அல்வாய்.* (81351)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்தவர் சகோதர பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன்.

உண்மைகளைச் சீரணிக்க முடியாதவர்களால் அவர் படுகொலை செய்யப்பட்டார். மூன்று சின்னஞ்சிறார்களைக் கொண்ட அவரின் இளம் குடும்பத்துக்கு உதவும் மனிதாபிமானப் பணியை உதயன் ஆரம்பித்தது.

நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதிக்கு யாழ்ப்பாணச் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் அள்ளி அள்ளி வழங்கி எமது மக்களின் இரக்க சிந்தைக்குச் சிகரம் வைக்கிறார்கள்., எமக்கு மத்தியில் அன்புள்ளங்கள் நிறைந்துள்ளன என்று எடுத்துக்காட்டி வருகின்றனர்.

உதவி நிதி நாளாந்தம் வந்து குவிகிறது. இந்நிதியை நிமலராஜன் குடும்பத்தினரிடம் உரிய முறையில் சேர்ப்பிக்கும் பொருட்டு அன்பளிப்புகளைப் பெறுவதை கடந்த 5ஆம் திகதியுடன் பூர்த்தி செய்துள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம்.


கருணையும், வள்ளல் தன்மையும உள்ள எங்கள் வாசகர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

**05.12.2000 (செவ்வாய்க்கிழமை)வரை கிடைத்த நிதி:- ரூபா- ச.**

| | |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 11,24,212.75 |
| 1. ஓர் அன்பர் - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் - | 250.00 |
| 2. ஊழியர் நலன்புரிச்சங்கம் - பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - | 2,001.00 |
| 3. சி.பாமினி - முகமாலை (அமரர் சி.சிவானந்தம் நினைவாக) - | 100.00 |
| 4. ஊழியர் நல்ன்புரிச்சங்கம் - சாவகச்சேரி பிரதேசசபை - | 2,001.00 |
| 5. அமரர் மு.ஜெயதரன் நினைவாக - ஐயம்பிள்ளை முருகையா, சிவன்வீதி உரும்பிராய் (கிழக்கு) - | 500.00 |
| 6. தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் - பருத்தித்துறை - | 1,050.00 |
| 7. திரு.சி.யோ.செல்வநாயகம் - கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் - | 1,000.00 |
| 8. ஓர் ஓய்வூதிய அன்பர் - சந்தை வீதி, உடுப்பிட்டி- | 201.00 |
| 9. இலங்கை சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்கள் 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் - | 5,500.00 |
| 10. திரு.இரட்ணம்பிள்ளை (C.T.B) கொக்குவில் மேற்கு, கொக்குவில் - | 300.00 |
| 11. உத்தியோகத்தர்கள் - கரவெட்டி பிரதேச செயலக நலன்புரிச்சங்கம் - | 8,000.00 |
| 12. ஓர் அரசசார்பற்ற நிறுவனம் - யாழ்ப்பாணம் - | 12,501.00 |
| 13. றோட்டரக்ட் கழகம் - சுன்னாகம் - | 1,111.00 |
| 14. அதிபர், யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை- | 500.00 |
| 15. குமாரசாமி மங்கையர்க்கரசி ஞாபகார்த்தமாக வி.அசோக், யாழ் இந்துக்கல்லூரி - | 500.00 |
| 16. பல்கலைக்கழக ஊழியர் சங்கம் - யாழ்ப்பாணம் (2ஆம் கட்ட பங்களிப்பு) - | 925.00 |
| 17. திரு.லோகநாதன் - அரியாலை - | 100.00 |
| 18. அதிபர், ஆசிரியர்கள் - யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம் - | 1,900.00 |
| 19. மாவட்ட நீதிமன்றம் - மல்லாகம் - | 1,400.00 |
| 20. சபாலிங்கம் நாகரெட்ணம் - முதலாம் வட்டாரம் அல்லைப்பிட்டி - | 2,000.00 |
| 21. தலைவர், பணிப்பாளர், ஊழியர்கள் - வேலணை ப.நோ.கூ.சங்கம் : | 2,000.00 |
| 22. ஊர்காவற்றுறை பிரதேச செயலகம், நலன்புரிச் சங்கம் - உதவி அரசாங்க அதிபர் பணிமனை (2ஆம் கட்டப் பங்களிப்பு) - | 900.00 |
| 23. யாழ். முஸ்லிம் வர்த்தகர்கள் - | 10,350.00 |
| 24. ஜனாப் எம்.நூர்டீன் - அச்சுவேலி - | 150.00 |
| மொத்தம் | 11,79,452.75 |

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 06 - 1922



உதிர்வு 19 - 11 - 1999

### திருமதி சோதிநாதன் மகேஸ்வரி

திதி: 07.12.2000

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்தி பகல் வந்தித்து ஈன்றெடுத்த அன்னையே!
ஆண்டொன்று போனாலும் உன்நினைவு மீளவில்லை
கண்டு கொள்ள மனம்துடிக்கும் காதலை ஆறிடுமோ?
கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்!

உன்சாந்திக்காய்..

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*3 ஆமகட்டை, கல்வியங்காடு.* (81345)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல
# பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம்மாதம் 4 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்.

### சங்கானை

(165670 ஏ), (169980ஏ).
(169985 ஏ), (169985 பி),
(170099 ஏ), (170099 பி),
(170128 ஏ), 170128 பி),
(170128 சி), (170128 டி),
(170143 ஏ), (170209 ஏ),
(170209 பி), (170209 சி),
(170209 டி), (170349 ஏ),

### நெடுந்தீவு

(13882 ஏ), (14028 ஏ),
(14028 பி), (14023 சி),
(14031 ஏ), (14031 பி),
(14051 ஏ). (14051 பி),
(14132 ஏ), (14132 பி),
(14132 சி). (14132 டி)
(14132 எவ்), (14132 ஜி),
(14228 ஏ),

### யாழ்ப்பாணம்

(170656 ஏ),(170656 பி),
(170656 சி).

### கரவெட்டி

170803 ஏ), (13895 பி),
(14069 ஏ), (14239 சி),

### ஊர்காவற்றுறை

13090 ஏ), (13090 பி),
(13090 சி), (13641 ஏ),
(13871 ஏ), (13871 பி),
(13888 ஏ), (13888 பி),
(13895 ஏ, (13932 ஏ),
(13932பி), (13932சி),
(13932டி), (13982ஏ),
(13982பி), (13982சி),
(13982டி), (13989ஏ),
(13991ஏ), (13993ஏ),
(13993பி), (13993சி),
(13993டி), (13993ஈ),
(13993எவ்), (14013ஏ),
(14023ஏ), (14024ஏ),
(14025ஏ), (14025பி),
(14025சி), (14040ஏ),
(14040பி), (14042ஏ),
(14069ஏ), (14069பி),
(14069சி), (14069டி),
(14071ஏ), (14071பி),
(14071சி), (14071டி),
(14072ஏ), (14072பி),
(14072சி), (14072டி),
(14072ஈ), (4072எவ்),
(14073ஏ), (14075ஏ),
(14075பி), (14075சி),
(14077ஏ), (14077பி),
(14077சி), (14081ஏ),
(14143ஏ), (14149ஏ),
(14149பி), (14159ஏ),
(14159பி), (14172ஏ),
(14173ஏ), (14173பி),
(14173சி), (14173டி),
(14174ஏ), (74175ஏ),
(14175பி), (12175சி),
(14178ஏ), (14178பி),
(14178சி), (14178டி),
(14182ஏ), (14183ஏ),
(14183பி), (14183சி),
(14184ஏ), (14184பி),
(14184சி), (14184டி),
(14184ஈ), (14184எவ்),
(14194ஏ), (14204ஏ),
(14204பி), (14213ஏ),
(14213பி), (14236ஏ),
(14236பி), (14244ஏ),
(14252ஏ), (14252பி),
(14255ஏ), (14255பி),
(14259ஏ), (14259பி),
(14260ஏ).

### கோப்பாய்

(159668ஏ), (159871ஏ),
(162598ஏ), (162938ஏ),
(163641ஏ), (163686ஏ),
(163686பி), (163686சி),
(163686டி), (163686ஈ),
(166942ஏ), (166942பி),
(166942சி), (167079ஏ),
(167079பி), (167099ஏ),
(167111ஏ), (167555ஏ),
(167555பி), (167601ஏ),
(167667ஏ), (167667பி),
(167667சி), (167667டி),
(167667ஈ), (167675ஏ),
(167676ஏ), (167678ஏ),
(167678பி), (167682ஏ),
(167682பி), (167693ஏ),
(167693பி), (167693சி),
(167693டி), (167697ஏ).
(167697பி), (168240ஏ),
(168240பி), (168259ஏ),
(168260ஏ), (168300ஏ),
(168333ஏ), (168333பி),
(168340ஏ), (168340பி),
(170606ஏ), (170606பி),
(170606சி), (170610ஏ).
(170644ஏ). (170645ஏ).
(173203ஏ), (173203பி).
(173211ஏ), (173211பி).
(173211சி), (173224ஏ),
(173224பி), (173256ஏ).
(173256பி), (173257ஏ),
(173261ஏ), (173261பி).
(173261சி), (173268ஏ).
(173268பி), (173268சி),
(173943ஏ), (173943பி),
(173943சி), (173943டி).
(173946ஏ), (173946பி),
(173946சி), (173948ஏ),
(173948பி), (173961ஏ),
(173961பி), (173691சி).
(173981ஏ), (173981பி),
(173986ஏ), (173988ஏ),
(174112ஏ), (174115ஏ).
(174115பி), (174208ஏ).
(163715ஏ), (163834ஏ),
(163834பி), (168248ஏ),
(168248பி), (168274ஏ),
(168287ஏ), (168326ஏ),
(168326பி), (168398ஏ),
(168398பி), (173208ஏ).

### நல்லூர்

(136731ஏ), (145311ஏ),
(156897ஏ), (156899ஏ),
(156906ஏ), (156931ஏ),
(157166ஏ), (162848ஏ),
(162848பி), (162848சி),
(162856ஏ, (162856பி),
(162861ஏ), (162867ஏ).
(162867பி), (162867சி),
(162867டி), (162871ஏ),
(162909ஏ), (162909பி),
(167647ஏ), (167647பி),
(167680ஏ), (167680பி),
(167680சி), (167683ஏ),
(167683பி), (167700ஏ),
(167749ஏ), (167749பி),
[167762ஏ), (167762பி),
[167775ஏ], [16775பி],
[167775சி], [167779ஏ],
[167780ஏ], [167780பி],
[167780சி], [167781ஏ].
[167781பி], [167783ஏ],
[167783பி], [167783சி],
[167784ஏ], [167787ஏ],
[167787பி], [167787சி],
[167787டி], [170654ஏ],
[170901ஏ], [170902ஏ],
[170911ஏ], [170912ஏ],
[170921ஏ], [171200ஏ],
[171510ஏ], [171537ஏ],
[171542ஏ], [171542பி],
[171545ஏ], [171604ஏ],
(171613ஏ), (173922ஏ),
(173922பி), (173936ஏ).
(173956ஏ), (173956பி),
(173956சி), (173990ஏ),
(173990பி), (174111ஏ),
(174111பி), (174117ஏ),
(174127ஏ), (174127பி).
(174127சி), (174135ஏ),
(174135பி), (174136ஏ),
(174136பி), (174142ஏ),
(174152ஏ), (174152பி),
(166606ஏ), (168999ஏ),
(168999பி), (168999சி),
(168999டி), (169279ஏ),
(169999ஏ), (169999பி),
(170198ஏ), (170207ஏ),
(170291ஏ), (170311ஏ),
(170311பி), (170311சி),
(172988ஏ), (172988பி).
(172988சி), (172988டி),
(173106ஏ), (173128ஏ),

### சண்டிலிப்பாய்

(170033ஏ), (170033பி),
(170075ஏ), (170234ஏ),
(170234பி), (170237ஏ),
(170265ஏ), (170337ஏ),
(170353ஏ), (172761ஏ),
(172815ஏ), (172826ஏ),
(172826பி), (172826சி),
(172990ஏ), (170036ஏ).

### தெல்லிப்பழை

(166777ஏ), (170317ஏ),
(170612ஏ), (172123ஏ),
(172807ஏ), (172807பி),
(172878ஏ), (173122ஏ),
(173155ஏ), (173155பி).
(173180ஏ), (173180பி),

### உடுவில்

(162979ஏ), (162979பி),
(162979சி), (162979டி),
(162979ஈ), (167511ஏ),
(167526ஏ), (167638ஏ),
(167638பி , (167638சி),
(167638டி), (167658ஏ),
(167658பி), (167689ஏ),
(167689பி), (167689சி),
(167689டி), (167736ஏ),
(171538ஏ), (173179ஏ),
(173951ஏ), (173964ஏ),
(173965ஏ), (173965பி),
(174006ஏ), (174006பி),
(174006சி), (174006டி),
(174006ஈ), (174022ஏ),
(174102ஏ), (174102சி),
(174102டி), (174103ஏ),
(174103பி), (174104ஏ),
(174114ஏ), (174114பி),
(174206ஏ), (174206பி),
(174206சி), (174206டி),
(116495சி), (131740ஏ),
(131740பி), (160692ஏ),
(161645ஏ), (166495ஏ),
(166495பி), (169165ஏ),
(169165பி), (169381ஏ),
(169381பி), (170245ஏ),
(170245பி), (170287ஏ),
(170287பி), (170287சி),
(170290ஏ), (170290பி),
(170334ஏ), (170335ஏ),
(172820ஏ), (172820பி),

### வேலணை

(13808ஏ), (13808பி),
(13808சி), (13949ஏ),
(13968ஏ), (13973ஏ),
13997ஏ), (13999ஏ),
(13999பி), (13999சி),
(13999டி), (13999ஈ),
(13999எவ்), (13999ஜி),
(14006ஏ), (14006பி),
(14008ஏ), (14011ஏ),
(14019ஏ),
(14019பி) (14019சி),
(14019டி), (14021ஏ),
(14021பி), (14021சி),
(14024பி), (14024சி),
(14037ஏ), (14027பி),
(14031ஏ), (14032ஏ),
(14033ஏ), (14041பி),
(14041சி), 14054ஏ),
(14056ஏ), (14056பி),
(14056சி), (14064ஏ),
(14084ஏ), (14085ஏ),
(14092ஏ), (14092பி),
(14093ஏ), (14093பி),
(14093சி), (14093டி),
(14096ஏ), (14096பி),
(14099ஏ), (14100ஏ),
(11100பி), (14100சி),
(14100டி), (14106ஏ),
(14106பி) (14108ஏ),
(14108பி), (14108சி),
(14109ஏ).
(14109 பி), (14109 சி),
(14109 டி), (14115 ஏ),
(14115 பி), (14116 ஏ),
(14117 ஏ), (14119 ஏ),
(14121 ஏ), (14121 பி),
(14121 சி), (14121 டி),
(14121 ஈ), (14123 ஏ),
(14123 பி), (14125 ஏ),
(14125 ஏ), (14127 ஏ),
(14129 பி), (14129 சி),
(14129 டி), (14130 ஏ),
(14130 பி), (14131 ஏ),
(14133 ஏ), (14140 ஏ),
(141534 ஏ), (141534 பி),
(14157 ஏ), (14157 பி),
(14158 ஏ), (14158 பி),
(14158 சி), (14158 டி),
(14158 ஈ), (14158 எவ்),
(14160 ஏ], [14160 பி],
[14160 சி], [14160 டி],
[14160 ஈ) [14168 ஏ],
[14168 பி], [14171 ஏ],
(14171 பி], [14171 சி),
(14196 ஏ], [14196 பி],
(14225 ஏ], [14253 ஏ],
14254 ஏ], [14257 ஏ],
[14257 பி], (14257 சி],
[14257 டி], [14261 ஏ],
(14275 ஏ], [14275 பி].

## அனுமதி அட்டை பெற அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு, டிசெ. 7

கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் ஜி. சி. ஈ. சாதாரணதர மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் எம். ரி. பாலசுந்தரம் அறிவித்துள்ளார். (ம-152)

## டெங்குக் காய்ச்சலைத் தடுக்க விழிப்புணர்வு நடவடிக்கை

கந்தரோடை, உடுவில் கிராமங்களில் டெங்குக் காய்ச்சல் பரவாமல் தடுக்கும் நோக்கத்துடன் முன்னேற்பாடாக பல விழிப்புணர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுகாதார பகுதியினருடன் இணைந்து கந்தரோடை பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். எல். ஜெயராசா இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

இப்பகுதிகளில்உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்கள் சனசமூக நிலையங்கள் மற்றும் பாடசாலைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் டெங்குக்காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்ச்சிக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

டெங்குக் காய்ச்சலை பரப்பக்கூடிய நுளம்புகள் இங்கு தாராளமாக உள்ளன. வைரஸ் கிருமியால் டெங்குக் காய்ச்சல் பரவுகின்றன. வைரஸ் கிருமிகள் யாழ்ப்பாணத்தில் உட்புகுந்தால் காய்ச்சலால் பீடிக்கப்படுபவரை காப்பாற்ற முடியாது போய் விடுவதுடன் க விரைவாக இந்நோய் பரவக்கூடிய ஆபத்தும் உள்ளது. ஆகவே காய்ச்சல் பரவாதிருக்க முன்னேற்பாடாக நுளம்புகளை ஒழிக்க வேண்டும் — இப்படி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இக் கருத்தரங்குகளில், வலியுறுத்தி வருகின்றார்.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர் வர்களுடன் சுகாதாரப் பரிசோதகர் இணைந்து பாடசாலைச் சுற்றாடல் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார். நீர் நிலைகள், பற்றைகள், பூண்டுகள் என்பன அழிக்கப்பட்டன.

கற்பொக்கணை சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கைத் தொடர்ந்து அப்பகுதியிலும் சிரமதானம் மூலம் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ம-152)


## சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கம், உடுவில் பிராந்திய சபை
## ஏல விற்பனை

உடுவில் பிராந்திய சபையின் சுன்னாகம் பல நோ. கூ. சங்கப் பணியாளர் ஐக்கிய நாணய சங்கத்தின் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று[01] உடுவில் பிராந்திய சபையால் எதிர்வரும் 09-12-2000 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 12.00 மணிக்கு சுன்னாகம் பல நோ. கூ சங்கத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

குறிப்பு: -
மேற்படி நீர் இறைக்கும் இயந்திரத்தை சுன்னாகம் பல நோ. கூ. சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

செயலாளர்
உடுவில் பிராந்திய சபை

[81361]

## யா/ நவாலி மகாவித்தியாலயம் பரிசளிப்பு விழா - 2000

காலம்: இன்று (07--12--2000)
வியாழக்கிழமை பி. ப. 1.00 மணி
இடம்: பாடசாலை மண்டபம்
தலைவர்: திரு. அ. அலெக்சாண்டர் (அதிபர்)
பிரதம விருந்தினர்: உயர்திரு. வி. இராஜையா அவர்கள் [கல்விப்பணிப்பாளர், வலிகாம வலயம்]
சிறப்பு விருந்தினர்: திரு. க. தனபாலசிங்கம் அவர்கள் [உ. க. ப. சண்டிலிப்பாய்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர்.

(81357)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
## சகல வர்த்தகர்களுக்குமான அன்பான வேண்டுகோள்

02—12—2000 அன்று பிறிகேட் 512 உடன் நடந்த கலந்துரையாடலில், சகல வர்த்தக ஸ்தாபனங்களும் சனிக்கிழமைகளில் புதிய நேரம் பி. ப 2. 30 மணிதொடக்கம் அரை நாளும், ஞாயிற்றுக்கிழமைகள், போயா விடுமுறை, வர்த்தக விடுமுறைகளில் முழு நாளும் பூட்டப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. இந்த அறிவுறுத்தல்களுக்கு அமைய வர்த்தக ஸ்தாபனங்கள் நடக்கத் தவறின் அதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது கழகம் பொறுப்பேற்க மாட்டாது என்பதனை அன்புடன் அறியத் தருகின்றோம்.

குறிப்பு: இந்த அறிவுறுத்தல் கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப்படும் என்பதனை சகல வர்த்தகர்களின் கவனத்துக்கும் கொண்டு வருவது எமது கழகத்தின் கடமையாகும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி/14173)

அமெரிக்க அதிபர் பதவித் தேர்தல்:

# புளோரிடாவின் இறுதி முடிவை ரத்துச் செய்ய நீதிமன்றம் மறுப்பு

## அல்கோருக்கு அடிமேல் அடி

வாஷிங்ரன், டிசெ. 7
அமெரிக்க அதிபர் தேர்தலில் புளோரிடா மாகாண ஆளுநர் அறிவித்த முடிவுகளை ரத்துச் செய்யக்கோரி ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் தொடுத்தவழக்கை லியா கவுண்டி நீதிமன்றம் நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பு அல்கோருக்கு பேரியாடிகும் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

புளோரிடா மாகாணத்தில் கணனி மூலம் வாக்குகள் எண்ணப்பட்டதில் 930 வாக்குகள் அதிகம் பெற்று குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோர்ஜ். டபிள்.யூ. புஷ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதனை எதிர்த்த அல்கோர் மாகாண நீதிமன்றத்தின் அனுமதி பெற்றதை அடுத்து கைகளால் சில கவுண்டிகளில் வாக்குகள் எண்ணப்பட்டதில் புஷ் அதிகம் பெற்றிருந்த வாக்குகளின் எண்ணிக்கை சுமார் 500 ஆகக் குறைந்தது.

இந்த நிலையில், புளோரிடாவில் கைகளால் வாக்குகள் அனைத்தும் எண்ணப்பட்டால்தான் வெற்றி பெறத் தேவையான வாக்குகள் கிடைக்கும் என்று நம்பிய அல்கோர், மாகாண ஆளுநர் புஷ் வென்றதாக அறிவித்ததை ரத்துச் செய்யக் கோரி லியா கவுண்டி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தேர்தலில் கணனியால் வாக்குகள் எண்ணப்பட்டதில் முறைகேடுகளோ, தவறுகளோ நடந்திராவிட்டால் முடிவுகள் வேறுவிதமாக மாறி தான் உறுதியாக வெற்றி பெற்றிருப்போம் என்பதை அல்கோர் நீதிமன்றத்தில் நிரூபிக்கவில்லை என்று காரணங்காட்டி வழக்கை நிராகரித்து விட்டார்.

இரு நாள்களின் முன்னர், கைகள் மூலம் வாக்குகள் எண்ணப்படுவதற்கு காலக் கெடுவை நீடித்து புளோரிடா உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அமெரிக்க உச்ச நீதிமன்றம் நிராகரித்து தீர்ப்பளித்த மறுநாள் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கவுண்டி நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து புளோரிடா உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப் போவதாக அல்கோரின் சட்டத்தரணிகள் கூறியுள்ளனர்.

கவுண்டி நீதிமன்றம் மற்றும் அமெரிக்க உயர் நீதிமன்றம் ஆகியவை வழங்கியுள்ள இரு தீர்ப்புகளை அடுத்து புளோரிடா மாகாணத்தில் புஷ் மீண்டும் 930 வாக்குகள் அதிகம் பெற்று முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-8-6)

உணவுக்காக எண்ணெய் விற்கும்

# ஈராக் மீதான கட்டுப்பாட்டை ஐ. நா. 6 மாதங்கள் நீடித்தது

ஈராக் மீதான உணவுக்காக எண்ணெய் விற்கும் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஐ. நா. பாதுகாப்புச் சபை மேலும் 6 மாதங்களுக்கு நீடித்துள்ளது.

குவைத்தை ஆக்கிரமிக்க முயற்சித்து வளைகுடாப் போர் மூளக் காரணமான தற்குதண்டனையாக, ஈராக் உணவு மருந்து மற்றும் எண்ணெய்த் தொழிற்சாலை உபகரணங்கள் ஆகியவற்றை இறக்கு மதி செய்வதற்காக அவற்றின் பெறுமதிக்கு ஈடான பெற்றோலியத்தை மட்டும் ஏற்றுமதி செய்யலாம் என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை கட்டுப்பாடு விதித்திருந்தது.

கட்டுப்பாட்டுத் திட்டம் இந்த வருடத்துடன் முடிவடைய இருந்தது.

இந்தத் திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. ஈராக் மீது விதித்துள்ள இது போன்ற தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளால் ஈராக்கியப் பொது மக்களே கடுமையாகப் பாதிக்கப்படுவதாகவும்—

அதிபர் சாதாம் ஹுசைன் இதனால் தாக்க மடையப் போவதில்லை என்றும்—

பல நாடுகள் கூறி வந்ததால் உணவுக்காக எண்ணெய் திட்டம் இந்த ஆண்டுடன் விலக்கப்படும் என்று கருதப்பட்டது. (ஓ-8-6)

## கிரிக்கெட் மன்ற விசாரணையாளர் இந்தியா வருகை

உலக கிரிக்கெட் மன்றத்தின் பிரபல விசாரணையாளரான போல் கொன்டண் இந்தியாவுக்கு அடுத்த வாரம் வரவுள்ளார்.

கிரிக்கெட் பந்தயபேர ஊழலில் ஈடுபட்ட இந்திய வீரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைகள் குறித்து இந்திய கிரிக்கெட் சபையுடன் அவர் ஆலோசனை நடத்துவார்.

கொன்டனுடன் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை விசாரணையாளர் கிரேக் மெலிக்கும் இந்தியா வருகிறார்.

# புலிகள் குறித்த நிலைப்பாட்டை பா.ஜ.க. தெளிவுபடுத்த வேண்டும்

## ஜெயலலிதா வலியுறுத்தல்

சென்னை, டிசெ. 7
இந்தியாவில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தலைமை தாங்கும் பாரதிய ஜனதா கட்சி விடுதலைப் புலிகள் குறித்துத் தமது நிலையை தெளிவுபடுத்த வேண்டும் என அ. தி. மு. க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கோரியுள்ளார்.

சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இதனை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்;

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதுதொடர்பாக முரண்பட்ட கருத்துகளைத் தெரிவிப்பதாலேயே தான் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவுதரும் நடவடிக்கைகள் மீண்டும் தலை தூக்கத் தொடங்கியிருப்பதால் இதற்கு ஆதரவான அமைப்புகளை மத்திய அரசு தடை செய்ய வேண்டும் என்று அந்த அறிக்கையில் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.



விடுதலைப் புலிகள் ஆதரவு சுவரொட்டிகள் தமிழகத்தில் ஒட்டப்படுவதுடன் பிரபாகரனது புகைப்படங்களும், புலிகளின் பிரசுரங்களும் விற்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள ஜெயலலிதா இவற்றைத் தடுக்க மாநில அரசு இதுவரை எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார். (ஓ-8-6)

## நாடாளுமன்றம் தொடர்ந்து ஒத்திவைப்பு

புதுடில்லி, டிசெ. 7
பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள மத்திய அமைச்சர்கள் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி ஆகியோரை பதவி விலகக்கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்திய நாடாளுமன்றத்தில் கூச்சல், குழப்பம் விளைவித்து வருவதால் தொடர்ந்து 8 ஆவது நாளாக இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட 8 ஆம் ஆண்டு நிறைவு நேற்று நினைவு கூரப்பட்டதை அடுத்து நாடெங்கும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. (ஓ)

## பாகிஸ்தான் வரவேற்பு

இஸ்லாமாபாத், டிசெ. 5
ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் அரசு மீது ஆயுதத் தடை விதிக்கும் ஐ. நாவின் முடிவைப் பாகிஸ்தான் வரவேற்றுள்ளது.

ஆனால் ஆப்கானிஸ்தானிய மக்களைப் பாதிக்கக் கூடிய பொருளாதாரத் தடைகளை ஐ. நா. விதிக்கக் கூடாது என்றும் பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஓ-7)


காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்

14-12-2000 வியாழக்கிழமை

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 14-12-2000 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும்.

பொதுச்சபைப் பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு நிகழ்ச்சிநிரல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாத பொதுச்சபைப் பிரதிநிதிகள் சங்கத்தலைமைக் காரியாலயத்தில் நிகழ்ச்சி நிரல் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

திரு. ச. பாலசுப்பிரமணியம்,
தலைவர்

க. நடராசா,
செயலாளர்.

பணிமனை,
ப. நோ. கூ. சங்கம், காரைநகர்.
6-12-2000. [சி/14179]



## நன்றி நவிலல்

### ஞானப்பிரகாசம் பூவிலிங்கம்

என்பவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு அனுதாபம் தெரிவித்த குருக்கள், கன்னியர்கள், அருட்சகோதரர்கள்,சங்க திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்னும் எமக்கு உதவி தேவைப்பட்ட போதெல்லாம் கைகொடுத்து பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்,
பூ. கீதா

23, சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (81373)



## மரண அறிவித்தல்

### செல்லையா சிவசுப்பிரமணியம்

பூநகரியைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்கள் 04-12-2000 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், நேசமணியின் அன்புக் கணவரும், சுந்தசாமி, குருநாதன், விக்னேஸ்வரன், காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கா, சிவா, செல்வம், (நோர்வே), காலஞ்சென்ற சோதி மற்றும் சாந்தி, தேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம், அன்பரசி, உஷா, சிறி, புவனேந்திரம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சபேசன், ஜோதிகா, சகிலன், அபிராமி, விஷாகினி, வினுசாளினி, சோபா ஆகியோரின் பாசமிகு பேரனும், மலர், ராசாத்தி, திலகா, சின்னக்கிளி, கந்தசாமி, இராசநாயகம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(6-12-2000) புதன்கிழமை பெரிய கோமரசன் குளம், வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செல்லையா விக்னேஸ்வரன்,
(சகோதரன்)
திருமதி இராசையா சாந்தி.
(மகள்)

செல்வம் மில் லேன்,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (81355)



## கண்ணீர் அஞ்சலி

கலைமன்ற வீதி, புலோலி கிழக்கைப்பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற முன்னாள் உணவு, விவசாய, வர்த்தக பொருளாதார அமைச்சின் நிரந்தர செயலாளருமாகிய

திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை (C. C. S., OBE)

அவர்களின் அன்பு மனைவியும் கொழும்பு மகளிர் சங்க முன்னாள் தலைவியுமாகிய

### திருமதி கனகம்மா ஆழ்வாப்பிள்ளை

அவர்களின் மறைவுக்காக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய அருள்மிகு முதல்வி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள்,
(சி/14177) ஞானசம்பந்தர் கலைமன்றம்.

## தாதியர் பயிற்சி

# நேர்முகப் பரீட்சைக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள தாதியர் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் தற்பொழுது இடம் பெயர்ந்து இருப்பவர்கள் தமது நேர்முகப் பரீட்சைக் கடிதங்களை வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் தற்போது இடம்பெயர்ந்து இருப்பவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ கே.வானதி (கச்சாய் வீதி, கொடிகாமம்)
★ எஸ்.மதிவதினி (கல்வயல், சாவகச்சேரி)
★ ஓ.அருணழகி (விடத்தற்பளை, மிருசுவில்)
★ வி.தங்கவேல் (எழுதுமட்டுவாழ், தெற்கு)
★ இ.சிவதாசன் (கைதடி தெற்கு)
★ கே.தவனேஸ் (கனகரத்தினம் வீதி, அரியாலை)
★ ஈ.ஸ்ரீதரன் (கைதடி தெற்கு)
★ ஈ.சிவேந்திரன் (கைதடி தெற்கு)
★ பி.சுகந்தினி (மகளிர் கல்லூரி வீதி, சாவகச்சேரி)
★ வி.பாலரூபன் (கனகரத்தினம் வீதி, அரியாலை)
★ என்.எஸ்.செல்வரட்ணம் (பெருங்குளம் றோட், கல்வயல்)
★ வி.யாழினி (தாழையம்பதி வீதி, சாவகச்சேரி)
★ ரி.பத்மாவதி (வேம்பிராய், கொடிகாமம்)
★ கே.திருச்செல்வி (பொற்கொல்லர் வீதி, சங்கத்தானை)
★ டி.சந்திரகலா (பருத்தித்துறை வீதி, கொடிகாமம்)
★ எஸ்.பரந்தாமன் (கச்சாய் தெற்கு, கொடிகாமம்)
★ எஸ்.சவஜினி (மீசாலை கிழக்கு)
★ எஸ்.குணவேந்தன் (கற்குழி, சாவகச்சேரி)
★ எஸ்.வெ.கனேஸ்வரன் (மட்டத்தடி வீதி, சாவகச்சேரி)

இந்த 19 பரீட்சார்த்திகளையுமே எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் வைத்தியசாலை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பரீட்சை நேர்முகக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6-139)

## பரீட்சைமுடிவுகள் வெளியாகின

காரைநகர்,டிசெ.7

கோப்பாய், பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் இரண்டாம் வருட மாணவர்களுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று புதன்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைப் பெறுபேறுகளை கலாசாலைகளில் உள்ள விளம்பரப் பலகைகளில் இன்று முதல் பார்வையிடலாம் என கலாசாலை அதிபர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-73)

## ரயிலில் சென்ற தமிழ் இளைஞன் கைது

கொழும்பு,டிசெ.7

வவுனியாவில் இருந்து இரவு தபால் ரயிலில் பயணஞ் செய்து கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரை கடந்த மாதம் 16ஆம் திகதி வத்தளை, ராகம பொலீஸார் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிமால் என்று அழைக்கப்படும் இராமையா தர்மசீலன் என்பவரே கைது செய்யப்பட்டவர் என்றும் -

இவருக்கு ஒரு கையும் ஒரு காலும் இல்லை. உடல் முழுவதும் 15 துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன எனவும் - பொலீஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்து புறப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இவரிடம் இல்லாததாலேயே இவர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(ம-4)


வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின்
கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர்
அளிக்கும்
புலமைப் பரிசில்கள் வழங்கும்
பெருவிழா

மேற்படி நிகழ்வு நாளை (08.12.2000) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினர்:
திரு. எம்.கே.சிவாஜிலிங்கம்
(தலைவர், வல்வெட்டித்துறை நகர சபை)
அவர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்.

2000 ஆம் ஆண்டிற்கான பரிசில் தொகை
ரூபா அறுபதினாயிரம் (60,000/=)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கத்தினர்,
யா/வல்வை சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

(81360)



யாழ். உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

பிஞ்சு நெஞ்சங்களில் உதித்த
உதய நிலா (மாணவர் இதழ்)
வெளியீட்டு விழா

காலம்: இன்று (07-12-2000) வியாழன் மு.ப. 11.00 மணி
தலைமை: கவிமணி க. ஆனந்தராசா (அதிபர்)
வாழ்த்துரை: திரு.இ. சிவஞானசுந்தரம்
(கோட்டக் கல்வி அதிகாரி - கோப்பாய்)
ஆய்வுரை: ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் (பழைய மாணவர்)

ஆர்வலர்கள் அன்புடன் வருக!

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பா.அபிவிருத்திச் சங்கத்தினர்.

உதயநிலாவின் உதிப்பை வாழ்த்துவோர்:
போஸ்கோ நிறுவனத்தினர்
(பிரபல பாடசாலைப் பொருள்கள் விற்பனையாளர்)
யாழ்ப்பாணம்.


## தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகும் எழுத்துப் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளை தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது எனவும் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை மாணவர்களது பகிஷ்கரிப்புப் போராட்டத்தால் தடைப்பட்டிருந்த செய்முறைப் பரீட்சைகள் அனைத்தும் தற்போது நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## கைப்பணிக் கண்காட்சி

உடுப்பிட்டி மத்தி மகளிர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கமும் மாவட்ட கூட்டுறவுச் சபையும் இணைந்து நடத்தும் அடிப்படை மனையியல் பயிற்சி கைப்பணிக் கண்காட்சி எதிர்வரும் 9ஆம் 10ஆம் திகதிகளில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

க.முத்துவேலு தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-5)

## மூன்று இளைஞர்கள் கைதானதாக முறைப்பாடு

கோண்டாவில், மானிப்பாய், சுன்னாகம் பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவில் அவர்களது உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த ராஜ் மனோகரன் தயாகரன்(வயது23) என்பவர் கடந்த 24ஆம் திகதி கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்புப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்றும் -

சுதுமலை,மானிப்பாயைச் சேர்ந்த நகுலேந்திரன் ஜெயரூபன்(வயது 21) என்பவர் கடந்த 5ஆம் திகதி கைது செய்யப்பட்டு உடுவில் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொன்னுத்துரை ஸ்ரீ கௌரிதாசன் (வயது 23 உடுவில் தெற்கு, சுன்னாகம்) என்பவர் நேற்று அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-5)


### தவறிவிட்டது

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி சத்தியபாமா தனபாலசிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை(626261183V), வி.அ. அட்டை(091204268), ஆசிரியருக்கான உத்தியோகத்தர் அட்டை என்பன 05.12.2000 அன்று புங்குடுதீவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து
ஸ்ரீ சக்தி வர்த்தக நிலையம், 310A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (T.P.No.2523)எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (81371)



கணக்கீடு
A/L DAY CLASS
பங்குடமை
Mon., Tue., Thu.
8.00 - 9.00 a.m
Mr.தவா
B.Com.(Hons) [Acc.Spl.]
* COM., ECON.
வழமையான ஆசிரியர்கள்
* Gr. 6 முதல் O/L வரை
2001 புதிய வகுப்புகள்
ஆரம்பம்:
09.12.2K 8.00 a.m
SHAMROCK
29/3,J/ சோமசுந்தரம் அவன்யூ.


# சுகாதார வைத்திய அதிகாரி விவகாரம்; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரிக்கும் யாழ்.மாநகரசபை உறுப்பினர்களுக்கும் இடையே உருவாகியுள்ள பிணக்கு தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதன் முழு விவரமும் வருமாறு:-

அண்மைக்காலத்தில் யாழ்.மாநகர சபையில் சுகாதார சேவை அதிகாரி தெய்வேந்திரன் அவர்களை பதவி நீக்கம் செய்வேண்டும் என்று கோரி குரல் எழுப்பியதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்ததினால் அவருடைய சேவையின் தன்மை பற்றி குறிப்பிட வேண்டிய அவசியத்துக்கு ஆளாகியுள்ளோம்.

கடந்த காலங்களில் இடம் பெயர்வுக்கு முன்னதாக மக்கள் பட்டபாட்டை மக்களோடு மக்களாக இருந்து அறிந்தவர் யார்? சந்தர்ப்பக் கோளாறினால் சமுதாய அத்தாணி மண்டபத்தில் அமர்ந்து கொண்ட இவர்கள் யாழ்.மக்கள் பட்ட சுகாதாரச் சீர்கேடு உட்பட துன்பதுயரங்களையும், இன்னல்களையும், இடர்பாடுகளையும், அறிந்திருபார்களா? அல்லது அதிலொரு துளியையாவது அனுபவித்திருப்பார்களா? ஆனால், இன்று தாங்களே இதுவரை காலமும் யாழ். மக்களுக்காகவும், மக்களின் சகல தேவைகளுக்காகவும் உழைத்து உருக்குலைந்தவர்கள் போல் உளறித்திரிகின்றார்கள்.

ஆணையாளரின் அதிகாரக் கெடுபிடி ஒருபுறம் மற்றைய மாநகர சபைகளில் உள்ள சுகாதாரக் கருவிகளும் ஊழியரைக் காக்கும் தற்காப்புக் கருவிகள், தொற்று நோய்க் கிருமிகளை ஒழிக்கும் மருந்துகள் இல்லாமை ஒருபுறம், இவற்றை எல்லாம் தருவித்து சுகாதாரச் சேவையை சீர்ப்படுத்த விரும்பாத மனமுள்ளோர் மறுபுறம். இப்படிப் பட்ட நிலையில், கடந்த 10 வருடங்களாக வைத்திய அதிகாரி தெய்வேந்திரன் ஆற்றிய சேவைகள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவை என்பதை யாரும் மறுக்கமுடியாது. அவருடைய அறிவுரையின் பேரிலும், பணிப்புரையின் பேரிலும் ஊழியர்கள், சுகாதாரச் சீர்கேடான இடங்களில் சீர்செய்யப்பட்டவை அவதியும், அவலமும் அதனால் மக்கள் அடைந்த நன்மையும் இலாபமும் மக்களே அறிவர். யாழ்.மக்கள் பட்ட துன்பங்களையும், படும்துன்பங்களையும் யாழ்.மக்கள் மட்டிலுமே அறிவார்கள். அவற்றை அதிகாரத்திலுள்ளோரும், ஆளவந்தோரும் அறிந்திருக்க நியாயமில்லை என்பதை நாங்கள் மனமார ஒப்புக்கொள்கின்றோம்.

சபைக் கூட்டங்களுக்கு வைத்திய அதிகாரிதான் வரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவரது சார்பில் யாரேனும் சுகாதாரப் பிரிவிலிருந்து பொறுப்புள்ள ஒருவர் கலந்துகொண்டால் போதுமானது என்பதும் நடைமுறையிலுள்ள ஒன்றாகும். இதை எல்லாம் புரிந்து கொள்ளாமல் கொக்கரிப்பதிலும், கூச்சலிடுவதிலும் பயன் என்ன? ஒருவர் செய்த தீமைகளை மறந்தாலும், அவர் செய்த நன்மைகளையும் நல்ல சேவைகளையும் மறந்துவிடக்கூடாது என்பதுதான் பொதுமறையின் போதனையாகும். எனவே இங்கு இடையிட்டு வந்தோரெல்லாம் அவரை நடைகட்டிப் போகச் சொல்வது விந்தையானது மட்டுமல்ல வேடிக்கையானதும் கூட. நோய்க்காப்பு நிலையங்கள், குழந்தை கண்காணிப்பு நிலையங்கள், வைத்திய நிலையப் பிரிவுகள் போன்றவற்றில் இடர் காலங்களிலும் இன்றைய நாள்களிலும் மக்கள் அடைந்து வரும் நன்மைகளை நாங்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதிகாரத்தைப் பிடித்து வைத்துக்கொண்டு செய்யவேண்டியதை செய்ய விடாமல் தடுத்து நிற்கும் ஆணையாளரைக் கண்டுகொள்ளாமல் எய்தவன் இருக்க அம்பை நோகும் பரிதாபமான செயல் கண்டு எழுந்ததே இவ் அறிக்கையாகும். அதனால் வைத்திய அதிகாரி மாற்றப்பட வேண்டியதில்லை. அவர் சேவையையும், அவர் சேவை ஆற்றிய காலங்களில் பட்ட துன்பங்களையும் அறிந்தவர்கள் மக்கள் மட்டுமல்ல மாநகர சபை ஊழியர்களும் கூட என்பதை மறுப்பதற்கில்லை. அதனால் மாற்றப்பட வேண்டியோரும், மனம் மாற வேண்டியவர்களும் உண்மை தெரியாமல் குற்றம் சாட்டியவர்களே ஆவர் என்பதை மிகவும் பணிவுடன் அறியத் தருகின்றோம்.

அன்றியும் ஒருவரைப் பதவி நீக்கம் செய்வதும், பழிவாங்குவதும் சுலபமான ஒன்றாகும். ஆனால் அப்படிப்பட்ட ஒருவரை, சேவை மனப்பான்மை கொண்டவரை, எப்படி எங்ஙனம் பெறமுடியும் என்பதை மக்களே சிந்திக்க வேண்டும் என்பதை யாழ். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் வைத்திய அதிகாரியைப் பதவி நீக்கம் செய்யும் படி கோருவோரைக் கோரி நிற்கின்றது.

இவரது சேவையையும் அவரின் தேவையையும் பற்றி உள்ளூராட்சி அமைச்சர், ஜனாதிபதி, வட மாகாண ஆளுநர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறோம். - என்று உள்ளது.

(ஐ)

# காங்கேசன்துறையில் ஐவர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் ஐந்து இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி சட்டத்தரணி என்.ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

நேற்று இந்த முகாமுக்கு விஜயம் செய்த அவர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் சேம நலன்களைக் கேட்டறிந்து கொண்டார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் பெயர் விவரம் வருமாறு:-

கொடிகாமம் சந்தியில் வைத்து இராணுவத்தால் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டவர்களான -

கார்த்திகேசு சுசீந்திரன் (வயது 19, மணியகாரர் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு), கந்தசாமி விமல சேனாதிராஜா(வயது 19 - இல 60 - ஒட்டுமடம் வீதி யாழ்ப்பாணம்),

ஊரெழுவில் வைத்து அதே தினம் கைது செய்யப்பட்ட சின்னத்தம்பி தயாபரன் (வயது 23 - உரும்பிராய் வடக்கு) -

கோண்டாவிலில் வைத்து கடந்த 24 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இராசமனோகரன் தயாகரன் (வயது 23 - எயிரேசன் றோட், கோண்டாவில்) மற்றும் வல்வெட்டித்துறையில் வைத்து பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட மாணவனான சபாரட்ணம் - இளையராஜா(வயது18 - சரசாலை தெற்கு, சாவகச்சேரி)

ஆகிய 5 இளைஞர்களுமே தற்போது காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 3 இளைஞர்கள் தமது உறவினர்களுக்கு கடிதங்களை ஒப்படைத்துள்ளதாகவும் அவற்றை உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி தெரிவித்தார். (ஐசு-5)

## கருத்தரங்கு

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று, இணையத்தின் தலைவர் பீ.விக்னேஸ்வரன் தலைமையில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல்வளா அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'யாழ்.குடாநாட்டு மக்களின் இடம்பெயர்வில் ஐ.நா. ஸ்தாபனத்தின் கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டனவா? அல்லது மீறப்பட்டனவா?' என்ற கருப்பொருளில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (ஐ-10)

## பாராட்டு விழா

அரியாலை,டிசெ.7

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஏற்பாட்டில் சங்க எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபடைந்த நான்கு மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும். (ம-17)

# பிரபாவைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விப்பை தனது சர்வதேச கணனி இணையம் மூலம் 'இன்ரர்போல்' விடுத்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக முதலாவது எதிரியாகக் கருதப்படும் பிரபாகரனைக் கைது செய்வதற்கு உதவும்படி கோரும் அறிவிப்பை 'இன்ரர்போல்' இப்போது - இந்தச் சமயத்தில் - வெளியிட்டிருப்பது - பல மட்டங்களிலும் பல்வேறு சந்தேகங்களையும் கிளப்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறலாம் என்று கருதப்படும் இவ்வேளையில்- 'பேச்சு' பற்றி பேச்சடிபடும் இச்சந்தர்ப்பத்தில் - இந்த அறிவிப்பு வெளியானதின் பின்னணியில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கக்கூடும் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

பேச்சுக்கான சூழ்நிலை ஏற்பட்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் பேச்சு நடத்த வரும் பிரபாகரனை இந்தியாவிடம் பிடித்துக் கொடுப்பது 'அசிங்கமான' செயலாக இருக்கும் என்று இலங்கைப் பிரதமர் கூறியிருப்பது-

பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கு முழு முயற்சிகளும் எடுக்கப்பட்டிருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி இந்திய நாடாளுமன்றத்தில் உறுதி கூறியிருப்பது-

புலிகளின் ஆதரவாளரான ஈழவேந்தனை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தியமை -

ஆகியவற்றின் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளியாகி இருப்பதும் இந்தியா மீது தமிழ் மக்கள் சந்தேகம் கொள்ளக் காரணமாக அமைந்துள்ளது என்று 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிக்கின்றது.

ஒரு புறத்தில் சமாதானத்துக்கான நோர்வே - ஐரோப்பிய முன் முயற்சிகளை வரவேற்பதாகக் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் மறைவான வேறு மாதிரியான விளையாட்டில் இந்தியா சம்பந்தப்பட்டுள்ளதோ என்று யாழ்ப்பாணத் தமிழர்களை ஐயுறவைக்கும் பல சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அப்பத்திரிகையில் விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபாவைக் கைது செய்ய உதவும்படி கூறும் இன்டர்போலின் அறிவிப்பில் பிரபாவின் பெயர், வயது, பிறந்த இடம் மற்றும் விவரங்கள், பொட்டம்மான் உட்பட அவரது சகாக்கள் சிலரின் பெயர் விவரங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன. (உ-7)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொது நூலகத்தின் தேவை அவசியமாக இல்லை. வன்னியில் உள்ள மக்கள் பொருளாதாரத் தடையினால் பாரிய அனர்த்தங்களைச் சந்தித்து வருகின்றனர். அந்த மக்களைப் பாதுகாக்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்பவும் அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அப்பாவி மக்களைப் பாதிக்கும் இந்தத் தடைகளை அரசு முதலில் நீக்கட்டும். அதைச் செய்தால் நானும் ஏனைய ஐ.தே.க. எம்பிக்களும் யாழ்.பொது நூலகப் புனரமைப்புக்கு எங்கள் சம்பளத்தை வழங்குவோம் - என்று ரணில் தனது உரையில் தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்த போது எதிர்க் கட்சி எம்.பிக்கள் ஆரவாரம் செய்தனர். (ஐ-7-8-10)

# பூநகரியில் இருவர் படுகாயம்

வவுனியா,டிசெ.7

பூநகரி - வாடியடிப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல்11.30 மணியளவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் சிவிலியன்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

வாடியடியைச் சேர்ந்த க.இந்திரன்(வயது29), சி.கபிலன்(வயது 19), ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை -

வன்னி - கனகராயன்குளம் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் நாராயணன் கமலேஸ்வரன் (வயது 26) என்பவர் படுகாயமடைந்தார் என வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-7-164)

## 'கினிகிர'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெடிகள் காரணமாக அவற்றை மீட்க முடியாதிருப்பதாகவும் -

அந்த வெடிப்பொருள்களை செயலிழக்கச் செய்யும் படையினரின் நடவடிக்கை, சீரற்ற காலநிலை காரணமாக மந்தகதியில் நடப்பதாகவும்-

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

'கினிகிர-5' நடவடிக்கை மூலம் நேற்று முன்தினம் தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் படையினர் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது. (உ)

### அதிகாரிகள் திடீர் நடவடிக்கை

# நடைபாதை வியாபாரிகளின் பொருள்கள் நேற்று பறிமுதல்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.நகரப்பகுதியில் உள்ள நடைபாதை வியாபாரிகளின் வியாபாரப் பொருள்கள் நேற்று யாழ். மாநகரசபை அதிகாரிகளினால் அப்புறப்படுத்தப்பட்டன.

நடைபாதைகளில் வியாபாரம் செய்வது மாநகரசபையினால் தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் தொடர்ந்து நடைபாதை வியாபாரிகள் தமது வியாபாரத்தினை நடத்தி வந்ததை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை பொலீஸாருடன் யாழ்.நகருக்கு வந்த மாநகர சபை அதிகாரிகள் நடைபாதை வியாபாரிகளின் வியாபாரப் பொருள்களை பறிமுதல் செய்ய முற்பட்டனர்.

அதிகாரிகளின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து வியாபாரிகள் தமது பொருள்களைத் தாமே அப்புறப்படுத்தினர். (ஐ-5-15-17)


BEACON
(கரவெட்டி)
இணைந்த கணிதம்
பகல் நேர வகுப்புகள்
A/L 2001
நடைபெறுகின்றது.
திங்கள், புதன் (10.00a.m)
A.பத்மநாதன்

BARATHY INSTITUTE
சித்தன்கேணி
தரம் 5
புலமைப்பரிசில் வகுப்பு
மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்
யாழ்.ஆசிரியர்
By: K.K.மோகன்
(Dip. IN TEACHER)
ஆரம்பம்: 09.12.2000
சனி 7.30 a.m.
அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு:
எமது நிறுவன ஆசிரியரால் மாதந்தம் வெளியிடப்படும் பயிற்சி வினாத்தாள்களை தொகையாகப் பெற விரும்பும் நிறுவனங்கள் எமது நிறுவன பரீட்சைப் பகுதியில் தொடர்பு கொள்ளவும்.
(81321) -அதிபர்.

இணைந்த கணிதம்
ஆசிரியர்:
நா.அம்பி B.Sc.
மீட்டல் - PAPER
A/L DAY CLASS
2001 A/L
சட்டப்படல்
நேர்கோடு
2002 A/L
காவிகள்
நடைபெறுகின்றன.
இணுவில்
பொருளியற் கல்லூரி
K.K.S.வீதி - இணுவில்
(81322)

BRIGHTMAN
கல்விநிலையம்
(நிராவியடிப் பிள்ளையார் கோவில் முன்பாக)
பிறவுன் றோட் - யாழ்.நகர்.
கல்வியாண்டு 2001
தரம் 5 முதல் O/L வரை
சகலபாடங்களும் எமது வழமையான "SUPER GRADE" ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படும்.
ஆரம்பம்: 09/12/2000 சனி - காலை-10.00 மணி.
(81244)

IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2001
5000 மாணவர்களுக்கு
பல்கலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி, பாடசாலை மாணவர்களுக்கு ஏற்புடைமையில் நன்கு திட்டமிடப்பட்ட பாடவிதானங்களைக் கொண்டது.
இப் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
ஆசிரியர்கள், அலுவலகர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறிகளைக் கொண்டது.
விண்ணப்பப்படிவங்களை நீங்கள் IIS அலுவலகங்களிலும், உங்கள் பாடசாலைகளிலும், பிரபல தனியார் கல்வி நிறுவனங்களிலும், அருகில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுத்திகதி 24/12/2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது
வருடம் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் இவ் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
மேலதிக விபரங்களுக்கு...
Institute of Informatics Studies (IIS)

எமது ஒரிஜினல், பிரமிட் வீடியோ CD வெளியீடு
அம்மன்
அடுத்த வாரிசு
புன்னகை மன்னன்
காதல் தேசம்
யாரோ எழுதிய கவிதை
விக்ரம்
இதயத்தை திருடாதே
அன்புள்ள ரஜனிகாந்த்
கடலோரக் கவிதைகள்
வருஷம் 16
ஆசை
சின்னக் கவுண்டர்
ஆறில் இருந்து அறுபது வரை
சகலகலா வல்லவன்
அபூர்வ சகோதரர்கள்
குரு சிஷ்யன்
நாட்டாமை
முத்து
மன்னன்
எஜமான்
மௌனராகம்
புதிய திரைப்படங்கள் Five Star, பிரமிட் CD களில் பெற்றுக்கொள்ளலாம்.
புதிய கார்ட்டூன் மற்றும் ஆங்கில திரைப்பட CD க்களும் உண்டு.
பிரதிகள் அனைத்தும் 240/-
I.T.N வீடியோ
27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P.: 021-3123
(81309)

புதிய கல்வி ஆண்டில் [2001 இல்]
புதிய வகுப்புகள்
தரம் - 03
பாலர் வகுப்பு
அதற்கென பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் நடத்தப்படும்.
பெயர்ப் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
The Express Institute
Irupalai, Kopay.
-அதிபர்
(81310)

MATHS CENTRE
M.M.V.Road Nelliady
பல்கலைக்கழக அனுமதி கிடைக்கக் கூடிய மாணவர்களுக்கான
SPECIAL ENGLISH
திரு.ஜோதி
ஆரம்பம்: 11-12-2k 8.00a.m. (ப.நே)
(81236)

Institute of Informatics Studies (IIS)
மிகக்குறைந்த கட்டணத்தில் விசேட கணனிப்பயிற்சி நெறிகள்
பல்கலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், உத்தியோகஸ்தர்களின் தேவை கருதி விசேடமாக உங்களுக்கென மிகக்குறைந்த கட்டணத்தில் கீழ்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளது.
ஆரம்பம் : 10-12-2000
சனிக்கிழமை பகல் 10.00 மணி

| பயிற்சிநெறிகள் | காலம் (மாதம்) | கட்டணம் |
| --- | --- | --- |
| Ms Excel 2000 | 3 | 1250.00 |
| Ms Word 2000 | 3 | 1250.00 |
| Ms Access 2000 | 4 | 1500.00 |
| Ms Power Point 2000 | 2 | 1000.00 |
| dBASE III + | 4 | 1250.00 |
| Visual Basic | 4 | 2500.00 |
| Java | 5 | 3000.00 |

கடந்த அக்டோபர் மாதம் ஆரம்பித்த JAVA பயிற்சி நெறியில் இணையத் தவறிய மாணவர்கள் 10-12-2000 ல் ஆரம்பிக்கும் 2ம் பிரிவில் இணைந்து பயனடைந்து கொள்ளுங்கள்.
மேற்படி பிரிவு வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் இடம்பெறும்.
இக் கட்டணச்சலுகை இப்பிரிவுக்கு மட்டுமே வழங்கப்படும்
இயக்குனர்.
IIS, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னையா அன்னம்மா

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அன்னம்மா அவர்கள் நேற்று 06-12-2000 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின்(மலாயன் பென்சனியர்) மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கரணவாய் கிராய் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
சு.கந்தசாமி(பேறாமகன்)
அருள்நாயகி கிறீம் ஹவுஸ்,
நெல்லியடி.
(C/1489)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.